*தலையங்கம்*

## தீபாவளி

நம் நாட்டில் கொண்டாடப்படுகின்ற பண்டிகைகளில் மிக விமரிசையாகக் கொண்டா டப்படும் பண்டிகை **தீபாவளி**. கொண்டாடுவதில் புதுமை ஒன்றுமில்லை. அதே சடங்குகள், அதே மரபுகள், அதே உற்சாகம். பொருளாதாரம் சரியில்லை என்றாலும் குழந்தைகளுக்காக, குடும்பத்தாருக்காக, ஊருக்காகக் கொண்டாட வேண்டியதாகி விடுகிறது. வருடத்தில் ஒரு நாள் குடும்பத்தாருடன் உற்றார் உறவினரையும் அழைத்து புத்தாடை அணிந்து, உண்டு மகிழ்ந்து குதூகலமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வந்து விடுகிறது. பண்டிகை நாள் நெருங்க, நெருங்க, சிறுவர் முதல், முதியோர் வரை இதே சிந்தனை, இதே பேச்சு. கடைகள், தெருக்கள், வாகனங்களில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம். இரைச்சல், நெரிசல், வாயு மண்டலத்தையே புகை மண்டலமாக்கும் பட்டாசு வெடியும், நெடியும், நிறையவே இருக்கும். இந்தப் பண்டிகையை இப்படி யெல்லாம் கொண்டாடுகிறோம் என்றால், இதற்கான காரணம் நிச்சயம் இருக்கும் அல்லவா? உண்மையான பின்னணி என்னவென்பது காலத்தால் மறந்து போயிருக்கலாம். ஆனால் இந்த அடையாளங்கள் இதன் வரலாற்றுச் சுவடுகள் அழிந்து போய் விடாமல் பாதுகாக்கப்படுகிறது என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாயிருக்கிறது. நன்மையும் உண்டு.

தீபாவளி பண்டிகை பற்றி நாம் அறிந்திருக்கும் கதைகள் பல உண்டு. இதெல்லாம் அவ்வளவு அவசியமானதாகத் தோன்றுவதில்லை. எனினும் ஸ்ரீ இராமர் 14 ஆண்டு காலம் வனவாசம் முடித்து அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டம் சூட்டிக் கொள்ளும் நாளின் ஞாபகார்த்தம் என்றும் நரகாசுரன் வதம் என்றும் குறிப்புகள் உண்டு. பண்டிகையின் முக்கிய அம்சம் என்ன என்று

**சங்கமயுகம்**

**பொருளடக்கம்**


**மலர்: 26 அக்டோபர் - நவம்பர்** 2012 **இதழ்: 4**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 01 |
| 2. பகவான் வாக்கு | 04 |
| 3. ஆன்மீக சாராம்சம் | 05 |
| 4. சிவபகவானின் புகழ்மாலை | 09 |
| 5. வாழ்க்கையில் நாணயம் | 10 |
| 6. மாற்றம் என்பது........ | 21 |
| 7. முற்பிறவியின் நினைவு | 23 |
| 8. ஆன்மீக உணர்வில்..... | 26 |
| 9. வெற்றிகரமான வாழ்க்கை | 30 |


**இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளச் செய்த மகா வாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும்.**

**ஆசிரியர்**

**"தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி"**



பார்க்கும்போது முக்கியமாக தீப அலங்காரம், ஸ்ரீ லக்ஷ்மி பூஜை என்பதாக இருக்கின்றது. தீப அலங்காரம் சரவிளக்குகளாலானதாக அமைக்கப்படுகிறது. அதாவது உலக நாடக மேடையில் தத்தம் பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஜீவாத்மாக்கள், அன்பும், பண்பும் நிறைந்தவர்களாக நெருங்கிய சம்மந்தத்தில் கூடி மகிழ்ச்சியாக ஒளி வீசும் நட்சத்திரங்களாக விளங்குகின்றனர் என்பதைக் குறிப்பதாகும்.

அடுத்து ஸ்ரீ லக்ஷிமி தேவியை எப்படி யெல்லாம் அலங்காரம் செய்து மகிழ்கிறார்கள். குறிப்பாக ஸ்ரீ லக்ஷிமி தேவியிடமிருந்து தன சம்பத்தை (செல்வத்தை) வரமாகப் பெறும் வழி பாடாக இருப்பதைக் காண முடிகிறது. உண்மையில் தனம் மட்டுமே ஸ்ரீ லக்ஷிமிக்குச் சொந்தமான தல்ல. ஸ்ரீ லக்ஷிமிக்கு இன்னும் பல சிறப்புகள் உண்டு. அந்தக் காட்சியை சற்று நம் மனக்கண் முன் கொண்டு வருவோம். ஸ்ரீ லக்ஷிமிக்கு நான்கு கைகள் காட்டப்படுகின்றன. ஒரு கை தூய்மையின் (Purity) அடையாளம். . இரண்டாவது கை (Prosperity) குறைவற்ற செல்வச் செழிப்பைக் குறிக்கும். மூன்றாவது கை (Perfection) அனைத்து தெய்வீகக் கலை அம்சத்தைக் குறிக்கும். நான்காவது கை முக்தி எனும் (Liberation) பந்தனங்களிலிருந்து விடு பட்டு அடைய வேண்டியதை அடைந்து விட்ட திருப்தியைக் குறிக்கும். அதாவது ஆரோக்கியம் (Health) செல்வம் (Wealth) மகிழ்ச்சி (Happiness) அனைத்தும் இதிலடங்கும். மேலும் நூறு இதழ்களைக் கொண்ட செந்தாமரை மலர் மீது நின்றிருக்கும் அல்லது அமர்ந்திருக்கும் கோலத்தில் காட்டப்படுகிறது. இதன் பொருள் நூறு சதவிகிதம் தூய்மையான, மற்றற்ற, உன்னத நிலையைக் குறிக்கும். ஸ்ரீ லக்ஷிமியின் கையிலிருந்து பொற்காசுகள் கொட்டுவதாக காட்டப் படுகிறது. இது அனைவருக்கும் வழங்கக் கூடிய செல்வச் செழுமையைக் குறிப்பதாகும். அடுத்து நான்கு யானைகள் தங்கச் கலசத்தின் மூலம் நீர் வார்ப்பதாகக் காட்டப்படு கிறது. இது நான்கு திசைகளைக் குறிக்கும். அதாவது நாலா பக்கமும் உள்ள பிரஜைகள் அனைவரும் பண்பில்சிறந்த வர்களாகவும், எஜமான விசுவாச முடையவர் களாகவும் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்கும். அதாவது உலகமனைத்தும் தனது அருளாசியின் கீழ் செழிப்பாக உள்ளது என்பதாகும்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட நாம், இன்னும் இது பற்றிய உண்மைகளையும், அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும் அதாவது ஸ்ரீ லக்ஷிமி என்றும், ஸ்ரீ துர்க்கை என்றும், இராஜ இராஜேஸ்வரி என்றும் ஜெகதம்பா என்றும், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீமன் நாராயணன் என்னும் பெயரில் மகிமைக்குரியவர் களாக நம் இதயத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் இவர்கள் யார்? இந்த மகிமை இவர்களுக்கு எப்படி கிடைத்தது? இவர்களும் போராடி, வெற்றி பெற்றுத்தான் பூஜைக்குரியவர்களானார்கள். ஆனால் இவர்களின் போராட்டம் ஸ்தூல மான தல்ல. இம்சையானதுமல்ல. இது யோக பலத்தால் வெற்றி பெற்றதன் பலன். மக்கள் நம்புவதைப் போல தேவதைகளுக்கும், அசுரர்களுக்கும் நடந்த போராட்டம் அல்ல. தேவதைகள் மற்றும் அசுரர்கள் ஒரே காலத்தவர் அல்ல. அதாவது தேவதைகள் இருக்கும் போது அசுரர்கள் இருக்க மாட்டார்கள், அசுரர்கள் இருக்கும்போது தேவதைகள் இருக்க மாட்டார்கள். இதன் பொருள் மானிடன் ஒரு காலத்தில் தேவதையாகவும், ஒரு காலத்தில் அசுரனாகவும் இருக்கின்றான். இந்த வேறுபாடு குணத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. மனிதனிடம் தெய்வீக குணங்கள் இருந்தால் தேவதை. அசுர குணமிருந்தால் அசுரன். சற்று விளக்கமாகக் கூறுவதானால், கடந்து போன சத்யுகம் (கிருத யுகம்) மற்றும் திரேதாயுக காலத்தில் சுமார் 2500 ஆணடுகள் மனிதன் ஆத்ம அபிமானியாக, மனத் தூய்மையுடையவனாக, சர்வ குணங் களும் நிறைந்தவனாக, 16 கலை அம்சம் உடையவனாக, சம்பூர்ண நிர்விகாரியாக,

அஹிம்சையைத் தர்மமாகக் கொண்டவனாக, மரியாதைக்குரிய புருஷோத்தமனாக இருந்தான் ஆதலால் அப்போது மனிதன் தேவதை. ஆனால் அதன் பிறகு துவாபரயுகம் ஆரம்ப மானதும் மனிதன் தேகாபிமானியாகி, ஆத்ம குணங்களை யும், ஆத்ம சக்திகளையும் இழந்து காம, குரோதம், லோபம், மோகம், அகங்காரம் ஆகிய தீய குணமுடையவனாக ஆனதால் மனிதன் அசுரன் ஆனான்.

இப்போது மனிதன் துவாபரயுகம் முதலாக தேகாபிமானியாக, இரஜோ குணம் மற்றும் தமோ குணம் உடையவனாகி தமோபிரதான நிலை யுடையவனாகவும் ஆகிவிட்டான். இதனடிப் படையில் இப்போது இங்கு தேவதை யாரு மில்லை. இப்போது இங்கிருக்கும் அனைவருமே மானிடர்கள் தான். எனினும் விதி விலக்கும் உண்டு. இப்போது யாரெல்லாம் தங்களுடைய ஆன்மீகப் பயிற்சி மற்றும் முயற்சியின் மூலமாக தேவதா பதவிக்கு அறுகதையுடையவர் ஆகின்றார்களோ, அவர்கள் வருங்காலத்தில் அதாவது இன்றைய கலியுகத்தை அடுத்து வரும் சத்யுகத்தில் தேவதையாக பிறவி எடுப்பார்கள். இவர்களில் குறிப்பிடத்தக்க முன்னோடிகளாக, இப்போதைய கலியுக இறுதியின் சங்கமயுகத்தில் பிரம்மா என்றும் ஜெகதம்பா சரஸ்வதி என்றும் அழைக்கப் டுகிறார்கள். இவர்களைப் பின்பற்றி இன்னும் சிலரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இப்போது பிரம்மா என்றும் சரஸ்வதி என்றும் அழைக்கப்படுகின்ற அவர்கள் அடுத்து வரும் பிறவியில் சத்யுகத்தில் உரிய பருவத்தில் சத்யுக மரபுப்படி ஸ்ரீ லக்ஷ்மி என்றும் ஸ்ரீ நாராயணன் என்னும் பெயர்களில் முடி சூட்டப்படுகிறார்கள். இது முதல் தேவதைகளின் அரசாட்சி ஆரம்பமாகிறது. எங்கும் தீப அலங்காரம் எங்கும் மகிழ்ச்சிப் பெருவெள்ளம், பேரானந்த மயம். இது தெய்வீக சகாப்தத்தின் ஆரம்ப நாள். ஆதலால் பண்டிகை நாள். இதைத் தான் நாம் இன்று வரையிலும் ஞாபகார்த்தமாக தீபாவளி என்ற பெயரில் கொண்டாடி மகிழ்கின்றோம்.

இது உலக நாடகத்தின் முதலாவது காட்சியாக இருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் சிவபரமாத்மாவால் படைக்கப்பட்ட தெய்வீகப் படைப்பின் காட்சியாகும். பூமியில் தேவதை களின் அரசாட்சி ஆரம்பமாகிற தென்றால் குதூகலத்திற்குக் குறைவேது? இம்மகோன்னத காரியம் நடைபெறும் பூமி பாரதம். ஆகவே தான் பாரதத்திற்கு இறைவனின் அவதார பூமி என்றும், சொர்க்க பூமி என்றும், இராம இராஜ்யம் என்றும் மகிமைக்குரியதாக விளங்குகின்றது. ஆதலால் தீபாவளி என்பதுஒரு சாதாரணப் பண்டிகை மட்டும் அல்ல, நமது பாரம்பரியத்தை நினைவூட்டும் விழா. ஆதலால் தீபாவளி நமக்கு மட்டுமே உண்டு. வேறெங்கும் கொண்டாடப் படுவதில்லை. ஆகவே சிறப்பாகவே கொண்டா டுங்கள். நாடகப்படி இந்த ஞாபகார்த்தம் நிஜமாகும் நாள் வெகுதூரத்திலில்லை.

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பல்லாண்டு காலமாக நாம் ஆண்டுக்கொருமுறை தீபாவளி பண்டிகை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்தப் பண்டிகை நமது பண்டைய மகோன்னத வரலாற்றுச் சிறப்புப் பின்னணியின் ஞாபகார்த்தம் என்ற உண்மை தெரிய வரும்போது மகிழ்ச்சி தரும் அதே நேரத்தில் வியப்பிலும் ஆழ்ந்து விடுகிறோம். நாடகத்தில் கட்டுண்ட ஜீவாத்மாக்கள் தமது வாழ்க்கைப் பயணத்தில் கர்ம பந்தனத்தால் ஒளியிழக்கும்போது பகவான் நினைவுக்கு வர, தேடுதல் ஆரம்பமாகிறது. பின்னர் பகவானுடைய அவதாரத்தால் விழிப்புணர்வு பெற்று கர்ம யோகியாகி பந்தனத்திலிருந்து விடுபட்டு தேவாத்மாவாக ஆகிவிடுகிறது. அப்போது அக இருள் அகன்று விட்டதால் எங்கும் ஒளி மயம் தான். இதன் மூலம் நாம் தான் தேவாத்மாவாக இருந்தோம். இப்போது மீண்டும் நாம் தான் அவ்வாறு ஆக வேண்டும் என்பது நினைவுக்கு வருகிறது. இந்த உயர் சிந்தனையில் வருங்கால பேரின்ப சுகம் தரும் சொர்க்கத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அனைவருக்கும் ஆன்மீக அன்பு கலந்த தெய்வீக தீபாவளி நல்வாழ்த்துக்கள் - ஆசிரியர்




*எனதருமைச் செல்வங்களே!*

*இந்த நேரம் மிகவும் நல்ல நேரம். சங்கமயுகம் பிரம்ம முகூர்த்தம். ஆதலால் உங்கள் எண்ணம் நிறைவேறும். சித்தி சொரூபம் ஆகிவிடுவீர்கள். இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இது தான்.*

*உங்கள் மனதை மனிதர்களிடமிருந்தும் மத குருமார்களிடமிருந்தும், தேவதைகலிருந்தும் விலக்கி, ஜோதி பிந்து சொரூபமாக விளங்கும் பரமாத்மாவாகிய என் மீதே திருப்புங்கள். ஆத்மா தூய்மையடையவும், சாந்தியில் நிலைக்கவும், சக்தியில் திளைக்கவும் இதுவே வழியாகும்.*

*இப்பூவுலக நாடக அரங்கத்தில் எல்லோருமே நடிகர்கள் தான். உங்கள் பாத்திரம் சிறப்பாக அமைய அனைத்தையும் சாட்சியாயிருந்து பாருங்கள். ஒவ்வொரு காட்சியையும், ஒவ்வொரு பாத்திரத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும், புரிந்து கொள்ளுங்கள். திருப்தி யோடிருங்கள். இப்போது வீடு திரும்பும் நேரம். பயணத்திற்குத் தயாராக இருங்கள்.*

*மங்களம் நிறைந்த புது வாழ்க்கைக்காக, உங்கள் விதியை புண்ணிய கர்மம் மற்றும் சேவை செய்வதன் மூலமாக இன்றே உறுதி செய்யுங்கள். உயர்ந்த லக்ஷியத்திற்கு முதலிடம் தாருங்கள். சம்பூரணம் அடையும் வழி கடினமானதல்ல. உங்கள் மீது நீங்கள் இரக்கம் காட்டுங்கள். அவகுணம் தவிர்த்து குணத்தையே நாடி மேன்மை அடைவீர்களாக!*

# ஆன்மீக சாராம்சம்

## (சங்கமயுக பிரம்மா குமார்-குமாரிகள் சகோதர சகோதரிகளுக்காக)
## ஞானாமிர்தம், தமிழாக்கம்

பாபா நம்முடைய முயற்சியைத் தீவிரப் படுத்துவதற்காக ஒவ்வொரு முரளியிலும் பல விஷயங்களைப் புரிய வைக்கின்றார். நமது முயற்சியில் அனைத்தையும் விட முக்கிய விஷயம் நம்முடைய மனநிலை. மனதின் செயல்பாடுகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்குத் தான் யோகா எனக் கூறப்படுகிறது. தற்சமயம் இல்லற மார்க்கம் என்று பாபா கூறுகிறார். துவாபரயுகத்திலிருந்து இந்த அசுத்தமான இல்லறம் நடந்து வருகிறது. இப்போது சத்யுகத் திலிருந்து ஆரம்பமாகப் போகின்ற இல்லறம் சுத்தமுள்ளதாக இருக்கும். அது தெய்வீக இல்லறமாகும். இப்பொழுது நம்முடைய இல்லற மார்க்கம் அசுரத்தன்மையுடையதாக ஆகி விட்டது. எனவே செயல்பாடுகளும் மாற்ற மடைய வேண்டும். எப்பொழுது நம்முடைய செயல்முறையில் மாற்றம் ஏற்படுகிறதோ அப்போது தான் சத்திய யுகம் வரும். இதன் பொருள் இப்பொழுது நம்முடைய முயற்சியின் முறை (தன்மை) மாற வேண்டும். இதைத்தான் தன்னைத் தானே மாற்றம் செய்து கொள்ளுதல் என்று நாம் சொல்கிறோம். இந்த மாற்றம் ஆகியுள்ளதா? இல்லையா? அல்லது ஆகிக் கொண்டிருக்கிறதா? இல்லையா? - இதை எவ்வாறு அறிந்து கொள்வது? எப்படி மருத்துவர்கள் தெர்மா மீட்டர் மூலம் ஒருவரின் உடல் உஷ்ண நிலையை அறிகின்றனர் அல்லது ஒருவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா, அவரது உடலில் எங்காவது அடிப்பட்டுள்ளதா என்று கண்களில் டார்ச் ஒளியால் பார்க்கின்றனர் அல்லது நாடியைப் பிடித்து பார்த்து அவருடைய இதயத் துடிப்பை பார்த்து அவர் உயிருடன் இருப்பதற்கான அறிகுறி தெரிகிறதா என்றெல்லாம் பரிசோதிக் கின்றனர். அதே போல் தான் நாம் செய்யும் முயற்சியும் கூட பரிவர்த்தனைக்காக, சதோ பிரதானமாவதற்காக, மனிதனிலிருந்து தேவதா நிலை அடைவதற்காக என்பதாக இருக்கிறது. உண்மையில் அது மனதை சிவபாபாவிடம் ஒரு முகப்படுத்தி ஆத்ம விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கானதாகும். இதன் பெயர் தான் யோகா. நாம் எந்த ஒரு தெய்வீகமான குணத்தை தாரணை செய்வதற்காக முயற்சி செய்கிறோமோ அதுவே நடத்தைகளை தேவதை போல ஆக்கு கிறது. நாம் கற்றுக் கொண்டிருக்கின்ற ஞானம் மூலமாக நம்முடைய நடத்தைகள் தூய்மை யற்றதாகி விட்டது, குற்றமுள்ளதாகவும் ஆகி விட்டது என அறிந்து கொண்டோம். இப்போது நாம் அதை சரிபடுத்த வேண்டும். அதற்கான சாதனம் - ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும். ஆகவே நம் இலட்சியம் நடத்தையை (செயல் முறைகளை) பரிவர்த்தனை செய்ய வேண்டும். பாபாவுடைய பல வாணி களில் (முரளி) நடத்தையில் பரிவர்த்தனை வேண்டுமென வலியுறுத்தப்படுள்ளது.

**(1) நடத்தை தூய்மையாக, தெய்வீக மானதாக, சுத்தமானதாக மாற்று வதற்கு விசேஷமாக ஆறு விஷயங்களை சோதனை செய்துக் கொள்ள வேண்டும்:**

(1) நடத்தையில் ஆன்மீகத் தன்மை மற்றும் ஆத்ம உணர்வு

(2) நமது மனநிலை இரக்கம் நிறைந்ததாக இருக்க வேண்டும். சிவபாபா இரக்க மனம் கொண்டவர். மனிதர்கள் எப்போதும் அனைவரிடமும் இரக்கம் காட்ட முடியாது. அவர்கள் ஒருவரிடம் கோபம், மற்றொருவரிடம் வெறுப்புடையவராக இருக்கின்றனர். ஆனால் பரமாத்மா அனைவரிடத்திலும் இரக்கம் கொள்கிறார். நாம் அனைவரும் பல பிறவிகளாக

குற்றம் செய்தவர்கள். அதிகமான தீங்கிழைத் துள்ளோம், விதி முறைகளை மீறி விட்டோம், மரியாதை களிலிருந்து தவிறிவிட்டோம். நாம் முழு படைப்பையுமே கெடுத்து விட்டோம், அழித்து விட்டோம். பரமாத்மா அளித்த வரதானங்களை வீணாக்கி விட்டோம். இருப்பினும் நம் மீது இரக்கம் கொண்டு மீண்டும் வந்துள்ளார். வாருங்கள், இப்பொழுது உங்களை அழைத்துச் செல்கிறேன், நீங்கள் மிகுந்த துக்கமுடையவர்களாகி விட்டீர்கள்! என்கிறார். ஒரு மனிதனுடைய மகன் ஒரு வேளை கெட்டுப் போய்விட்டால் (தவறான வழியில்) வீட்டை விட்டு வெளியேறு என்னைப் பொறுத்தவரை நீ இறந்து போய் விட்டாய், உன் முகத்தைக் கூட காட்டாதே என்பார். ஆனால் பரம தந்தை பரமாத்மா கூறுகிறார் - இனிமையான குழந்தையே, அன்பான குழந்தையே! நான் உன்னை அழைத்துச் செல்வேன், நீ வராவிட்டா லும் கூட அழைத்துச் செல்வேன்! இது தான் இரக்கம் என்பது. நாமும் கூட அதேபோல இரக்கமனமுடையவராக வேண்டும்.

(3) ஒவ்வொருவரிடமும் அன்பு செலுத்துதல். இதற்காக பாபா கூறுகிறார் - இனிமையாகப் பேசுங்கள், நல்லதையே கூறுங்கள். எதுவரை அன்பில்லையோ அது வரையிலும் அன்பாகப் பேச முடியாது. கோபப் படும் மனிதன், வெறுப்பு காட்டும் மனிதன் இனிமையாகப் பேச முடியாது. யார் மனதில் அன்புள்ளதோ அவரே இனிமையாகப் பேசுவார் - தாய் குழந்தையிடம் ராஜா, மகனே இங்கேவா, சாப்பிடு என்று கூறுவாள். அன்பு தான் அவ்வாறு பேச வைக்கிறது. எனவே உணர்வில் அன்பிருக்கட்டும். ஒருபோதும் வெறுப்புணர்வு அல்லது பழிவாங்கும் எண்ணம் வேண்டாம். அன்பு கொள்வதால் பல மடங்கு தீங்குகள் முடிவடைந்து விடுகின்றன.

(4) சேவை எண்ணம் கொள்ளவும். நாம் உலகத்திற்கு பணி (சேவை) புரிபவர்கள். பல பிறவிகளாக நாங்கள் உங்களுடைய சேவகர்கள் எனப்பாடி வந்துள்ளோம். இப்போது பாபா சேவைப் புரிவதற்கான வழிமுறை கூறியுள்ளார். சேவை செய்வதற்கான (தளம்) மைதானத்தையும் கொடுத்துள்ளார், என்ன சேவை செய்ய வேண்டும் என்பதன் இலட்சியத்தையும் தந்துள்ளார். எனவே இப்பொழுது சேவை பாவனையுடன் செய்யாவிட்டால் பின் எப்போது செய்வீர்கள்? ஆகவே நம்முடைய எண்ணத்தில் சேவை பாவனை இருக்கட்டும்.

(5) நன்மை செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு இருக்கட்டும். நாம் ஒவ்வொரு வருக்கும் நன்மை செய்ய வேண்டும். சிவ பாபாவை நன்மை புரிபவர் எனக் கூறுகிறோம். ஏனெனில் அவருடைய உணர்வு எப்போதும் நன்மை செய்வதாகவே இருக்கிறது, சதா நல்லெண்ணம் கொண்ட தாகவே உள்ளது. ஒரு போதும் யாருக்கும் தீங்கு செய்ய எண்ணியதே இல்லை. ஆதலால் நீங்களும் சேவை செய்யும் எண்ணம் கொண்டவராக இருக்கவும்.

(6) செயல்களில் நிமித்தமானவர் (கருவி) என்ற எண்ணம் இருக்க வேண்டும். நான் ஒரு கருவி தான், செய்விப்பவர் பாபா, செய்பவர் செய்விப்பவராகிய (சுவாமி) எஜமான் அவரே.

நம்முடைய எண்ணங்களில் மேலே கூறப்பட்ட ஆறு விஷயங்கள் இருக்கட்டும்.

### (2) அசரீரி நிலை (விதேகி)


பாபாவின் முரளிகள் அவ்யக்த நிலை அல்லது விதேகி பற்றிய விஷயங்கள் அடங்கியவை. தேகத்தில் இருந்து கொண்டே தேகத்திலிருந்து விடுபட்டு இருக்கும் போது தான் அவ்யக்த நிலையை அடைய முடியும். இதுவே நமது முயற்சியாக இருக்க வேண்டும். விதேகி நிலையில் இருப்பதற்கு பறக்கும் கலையில் இருக்க வேண்டும். இறங்கும் கலையின் நாட்கள் முடிந்து விட்டன. இப்போது கீழே விழச் செய்த நாட்கள் முடிந்து போய் விட்டன, இதை தன் மனதில் நிச்சயம் செய்து கொள்ளுங்கள். கல்யாணக்காரியாகிய சிவபாபா

கிடைத்துவிட்டார், இப்போது என்னுடையது பறக்கும் கலை, ஏறும்கலை. முதலாவதாக மனதில் இந்த எண்ணம் இருக்கட்டும். நம்பிக்கை இருக்கட்டும். நம்பிக்கை தான் மனதிற்கு வழிகாட்டி ஆகிறது. எவ்வாறு பொது மக்களுக்கு வழிகாட்ட தலைவர் இருக்கின்றாரோ, சீடர்களுக்கு வழி காட்ட குரு என்பவர் இருப்பார். அதுபோல் மனிதர்களுக்கு வழி காட்டுபவராக முன்னேறச் செய்பவராக இருக்கக்கூடிய மனிதன் மீது விசுவாசம் ஏற்படுகிறது. தன்னுடைய நம்பிக்கை எப்படியோ அப்படித்தான் தனது காரியங்களும் நடக்கின்றன. மனிதர்களுடைய செயல்களுக்கான தலைவன் மீது அவர்களுக்கு நம்பிக்கை மற்றும் விசுவாசம் இருக்கிறது. ஆகவே தான் நிச்சயமுள்ள ஆத்மாவிற்கு வெற்றி ஏற்படும் என பாபா கூறுகிறார். யார் ஒருவர் உறுதியாக இருக்கிறாரோ அந்த உறுதி வெற்றி வரையிலும் கொண்டு செல்லும். யார் ஜெயிப்போமா அல்லது தோற்றுவிடுவோமா தெரியவில்லையே என்று யோசிக்கின்றாரோ அவர் (மதில் மேல் பூனைப்போல) குறையுள்ள வராகவே இருந்து விடுகிறார். வெற்றி அடைந்தே தீருவேன், தோற்றுவிடு வதற்கான கேள்வியே எழவில்லை என நினைக்கின்றவர் வெற்றி பெறுவார். எனவே உறுதியான நிச்சயம் தான் நமது காரியங்களின் தலைவன் ஆகும். யார் ஒருவர் பரமாத்மா இருக்கின்றார் என்று உறுதியாக எண்ணுகிறாரோ அவர் பரமாத்மா பக்கம் செல்வார், யார் பரமாத்மாவே இல்லை பணம் தான் எல்லாமே என்று எண்ணுகிறாரோ அவர் அந்தப் பக்கம் தான் செல்வார். யாரொருவர் இப்பொழுது நம்முடையது பறக்கும் கலை என புரிந்திருக்கிறாரோ அவர் தான் தனது நல்ல நாட்கள் வந்து விட்டது, அதிர்ஷ்டசாலி ஆகிவிட்டோம், உற்சாகம் இழந்த, துயரமான, மனச்சோர்வடைந்த நாட்கள் முடிவடைந்து விட்டன என்பதை அறிந்து கொள்கிறார். ஏனென்றால் மனச் சோர்வடைந்த ஒரு மனிதர் எதையும் செய்ய முடியாது. அவர் இயல்பாக இறப்பதற்கு முன்பாகவே இறந்து விடுகிறார்.

மனமுடைந்து போன மனிதர் எந்தவொரு காரியத்திற்கும் பிரயோஜனம் இல்லை. எழுந்திரு, ஏதாவது வேலை செய் என மற்றவர் கூறினால் பதிலுக்கு அவர் நான் என்ன செய்வது, என்னுடைய அதிர்ஷ்டமே சரியில்லை, நான் எதைச் செய்தாலும் அனைத்தும் நேர்மாறாக ஆகிவிடுகிறது என்று சொல்வார். காரணம் அவரிடம் ஊக்கம், உற்சாகம், தைரியம் (துணிவு) எதுவுமே இல்லை. தைரியமுள்ள, தூக்கத்திலி ருக்கும் மனிதன் கூட எழுந்து நின்று விடுவான். மலையை வெடி மருந்தினால் தகர்த்து புகை வண்டியை (ரயில்) கொண்டு செல்வேன் என்று கூறுவான். நானும் செய்து காட்டுவேன், நானும் அந்த தந்தையினுடைய மகன் தான். துணிச்சல் என்பது அது போன்ற ஒரு பொருள். ஆனால் தைரியம் எங்கிருந்து கிடைக்கும்? என்னால் இப்படியும் கூற முடியும். ஏன் செய்ய முடியாது? ஒருவேளை முடியாது என்று எண்ணினால் அவ்வளவு தான்? முடிந்து விட்டது. பிறகு நம் மூலம் யார் செய்ய வைக்க முடியும். நம்மை நாமே கீழே விழ வைத்து விட்டால் யார் தூக்கி நிறுத்துவார்? நம்முடையது பறக்கும் கலை, இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவும். இரண்டாவதாக நான் ஃபரிஷ்தா என்பதை சதா நினைவில் வைக்கவும். ஒருவேளை நான் ஃபரிஷ்தா ஆவேனா, ஆக மாட்டேனா என்று நினைத்தாலே ஆக முடியாது. செல்லும் போது, திரும்ப வரும் போது, எழுந்திருக்கும் போதும் உட்காரும் போதும் சிங்கம் எப்படி நடந்து கொள்கிறது, பூனை எப்படி நடந்து கொள்கிறது, குள்ள நரி எவ்வாறு நடந்து கொள்கிறது. ஒவ்வொரு விலங்கும் அதனுடைய தீர்மானத்திற்கேற்ப நடந்து கொள்கிறது, குள்ள நரி பயத்துடனும், தயக்கத்தடனும் செல்கிறது. அதற்குத் தெரியும் மனிதன் வரக்கூடும். என்னை பிடித்து விடுவான் என்று. ஆகவே ஒரேயடியாக பயந்து பயந்தே செல்கிறது. யானை யினுடைய நடை ஒரேடியாக கம்பீரத்துடன் நடக்கும். அது எண்ணுகிறது நான் மிகப்பெரிய சக்திசாலியான மிருகம், என்னை யாரும் எதுவும்

செய்து விட முடியாது என்று. ஒவ்வொன்றினுடைய நடத்தையும் தனிப்பட்டது. யாரோ ஒருவர் கூறினார் ஒரு மனிதனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அவருடைய பேச்சு, நடையின் வேகம், உடை இந்த மூன்று பொருட்களிலிருந்து அந்த நபரைப்பற்றி அறியலாம். ஆடை அணிவதில் பலவித முறைகள் இருக்கின்றன. யார் எடுப்பாக ஆடை அணிந்திருக்கிறாரோ அவர் பேசும் விதம் மிக அதிகார தோரணையில் இருக்கும். அப்படி இப்படி நேர்த்தியில்லாமல் அணிந்திருந்தால் அவருடைய பேசும் தன்மை கூட வேறுவிதமாகத்தான் இருக்கும்.

சிலர் அன்பாகப் பேசுவார்கள், சிலர் மரியாதையாகப் பேசுவார்கள், பேசுகின்ற விதம் ஒவ்வொருவருடையதும் தனிப்பட்டது. அதுபோலவே நடையின் வேகமும், சிலர் ஓட்டமும் நடையுமாக செல்வார்கள். சிலர் ஒரேடியாக சாவகாசமாக நடப்பார்கள், வேகம் எதற்கு, எப்படியும் சென்றடைந்து விடுவோம் என்ற எண்ணம். எனவே தான் பேசுகின்ற விதம், நடையின் வேகம், ஆடை அணிவதன் விதம் இவற்றால் ஒரு நபரைப் பற்றிய அறிமுகம் அல்லது விவரம் தெரிய வரும். ஒவ்வொரு மனிதனும் நிச்சயமாக நான் ஃபரிஷ்தா, நான் ஃபரிஷ்தா, நான் ஃபரிஷ்தா இவ்வாறு இப்படியே எண்ணிக் கொண்டி ருந்தால் பறந்து விடக்கூடும். ஒருவேளை இப்படி எண்ணினால் எனக்கு பெரிய தொந்தி, என்னுடைய பாதம் புதைந்து போய்க் கொண்டிருக்கிறது - இவ்வாறெல்லாம் எண்ணுவது முழு தேக உணர்வாகும். எனவே நான் ஃபரிஷ்தா நான் ஃபரிஷ்தா என்ற உணர்வு, விழிப்புணர்வு இருக்கட்டும். இதற்காக பாபா கூறுகின்றார். ஒளி வட்டத்திற்குள் தான் இருப்பதாக எண்ணுங்கள் அல்லது நான் தாமரை மலர் ஆசனத்தில் அமர்ந்திருக் கிறேன், யோக நிலையில் மூழ்கி இருக்கின்றேன், அன்பில் மூழ்கியிருக்கின்றேன், பரமாத்மா நினைவில் ஆனந்தத்தை அடைந்து கொண்டிருக்கிறேன். இது போன்ற சொரூபத்தில் தன்னைப் பாருங்கள். தங்களுக்கு தன்னைப்பற்றிய தோற்றம் காணப் படும். எப்படி நீங்கள் பார்க்கிறீர்களோ அதுவே உங்களது காட்சி (தரிசனம்). எனவே நீங்கள் உங்களை எந்த ரூபத்தில் பார்க்கின்றீர்கள்? சிலர் தன்னை யோகி ரூபத்தில் சிலர் அரசியல் வாதியாக, டாக்டராக, வக்கீலாக பார்க்கின்றனர். நீங்கள் எந்த ரூபத்தில் பார்க்கின்றீர்கள்? பாபா சொல்கிறார் - தன்னை ஃபரிஷ்தா ரூபத்தில் பாருங்கள், நான் ஒளி வட்டத்தில் இருக்கிறேன், பறக்கின்ற ஃபரிஷ்தாவாக இருக்கிறேன், இரண்டாவதாக தன்னைத்தான் மீண்டும் மீண்டும் நினைவுப் படுத்திக் கொள்ளுங்கள் - நான் ஒளியாக உள்ளேன், ஒளியாக உள்ளேன், நான் சக்தியாக இருக்கிறேன்... நான் சக்தி.... முதல் முதலாக பாபா காட்சியைப் பார்த்தபோது ஏதோ ஒரு நட்சத்திரம் மேலே இருந்து வந்து கொண்டிருந்தது, ஏதோ ஒரு தேவதை, ஒரு தேவி, ஒரு அரச குமாரன், அரச குமாரி இறங்கி வந்து கொண்டிருந்தனர். மேலும் பாபா கூறுகிறார் அது ஒரு ஒளி மற்றும் சக்தியாக இருந்தது. இதனால் தான் விதேகியின் நிலையை அனுபவம் செய்தார். ஆதலால் அதிகமான அவ்யக்த முரளி நமக்கு விதேகி நிலையில் இருங்கள் என்ற இந்த தூண்டுதலைக் கொடுக்கிறது. அதற்காக நான் ஒளி, சக்தி, என்னுடைய விதேகி மன நிலை, பறக்கும் கலை - இவைகளில் தங்களின் காட்சியாகக் காணுங்கள்.



## சிவபகவானின் புகழ் மாலை

(பி.கு. லீலாவதி)

| | |
|---|---|
| *பாபாவுக்கு காலை வணக்கத்துடன் முதல்* | *சந்திப்பு* |
| *என் மனதைத் தொட்டது அவரின் புன்* | *சிரிப்பு* |
| *முரளியை எத்தனை முறை கேட்டாலும் ஏற்படுவதில்லை* | *சலிப்பு* |
| *சிலகாலமாக இருந்தது எனக்குள்ளே விகாரமான* | *கருப்பு* |
| *தந்தையை நினைக்கையில் நிறம் மாறி ஆனது* | *வெளுப்பு* |
| *நிராகாரியான பாபாவின் தோற்றம் ஒரு ஒளிப்புள்ளியின்* | *ஜொலிப்பு* |
| *பரமாத்மாவின் வாணியை வாசிப்பதில் என் நாவிற்கு கிடைக்கிறது* | *இனிப்பு* |
| *கீதா தொடக்கப்பள்ளியின் பயிற்சி உயர்ந்ததிலும் உயர்ந்த* | *படிப்பு* |
| *என் உள்ளத்தில் சதா இருப்பது பகவானின்* | *நினைப்பு* |
| *பாரதத்தில் 12 ஜோதிர்லிங்கத்திற்கு என்றும் உண்டு தனி* | *சிறப்பு* |
| *சொர்க்கத்திற்குப் போக நமக்கு வெகு விரைவில் பாபாவிடம்* | |
| *இருந்து வரும்* | *அழைப்பு* |
| *மகாவாக்கியத்தில் ஒவ்வொரு சொல்லும் சுவையான* | *கரும்பு* |
| *அஞ்ஞானியாக இருந்த நான் ஞானத்தின் வழியாக அடைந்தேன்* | *விழிப்பு* |
| *பரம தந்தை சிவன் மீது எனக்கு அளவு கடந்த* | *அன்பு* |
| *பாபாவின் வருகையை கண்டு களிக்க நான் போகத் துடிக்கும்* | |
| *இடம் மவுண்ட்* | *அபு* |
| *குடும்பத்தில் இருந்துக் கொண்டே பற்றற்று இருப்பதில் நான் ஒரு* | *தாமரைப்பூ* |

## எனக்கு நான் நேர்மையாயிருத்தல்

முதலாவது வகை நேர்மை என்பது நான் எனக்கு நேர்மையுள்ளவனாக இருக்கிறேன் என்றால் பிறரிடம் நேர்மையுள்ள வனாக இல்லை என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

ஒருவேளை ஒருவர் என்மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றார் அல்லது எனது நேர்மையைச் சந்தேகிக்கிறார் என்றால் அவர்மீது குறை காண்பதற்குப் பதிலாக நான் இன்னும் அதிக நேர்மையுள்ளவனாக ஆக வேண்டும் என்பதன் அறிகுறிதான் இது என்பதை உணர்ந்து இன்னும் அதிக நேர்மை யுள்ளவராக எப்படி ஆவது என்பது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

# வாழ்க்கையில் நாணயம்

பாரதம் பழம் பெரும் பூமி. புண்ணிய பூமி. நமது பண்புகள், நமது கலாச்சாரம் உண்மை யானது. உன்னதமானது. உலகின் கலங்கரை விளக்கமுமாகும். ஆதலால் நமது பண்புகள் மேலோங்க வேண்டும். வாழ்க்கைக் கலாச்சாரம் மேன்மையுற வேண்டும் என்ற சிந்தனை இப்போது பெரும்பாலானோருடைய உணர்வு களைத் தூண்டியிருக்கிறது என்பது ஒரு நல்ல சகுணம். எப்போது இம்மாதிரியான இலக்ஷியம் மேல் மட்டத்திலும் எழுகிறதோ, அப்போது இதற்கு என்ன செய்யலாம் என்ற கருத்தரங்கம், கலந்துரையாடல், ஆராய்ச்சிகள் சூடுபிடிக்க ஆரம்பிக்கிறது. இதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கும்போது, இது அவசியம் இது தான் சரியான தருணம், செய்யத்தான் வேண்டும் என்று மனதில் படுகிறது. ஆதலால் இது மேலோட்டமானதாக, அல்லது அறிவு பூர்வ மானதாக மட்டுமே இருந்து விடக்கூடாது. ஆன்மீகம் கலந்ததாகவும், நடைமுறையிலும் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணமும் இதற்கு வலுசேர்க்கும் என்பதில் ஐயமில்லை தான்.

உதாரணமாக உடம்புக்கு நல்லது என்று ஒரு சிலர் சத்து மாத்திரைகளைச் சாப்பிடலாம். ஆனால் உடலமைப்பின் ஆரோக்கியத்திற்கான இதர அவசியமான பயிற்சிகளையும், நியமங் களையும் கடைப்பிடிக்கும் போது தான் இது பலனளிப்பதாக இருக்கும். இது போலவே தான் பண்புகளும், பண்புகளுக்கு அதன் மகத்துவம் நிச்சயம் உண்டு. ஆனால் இதனை நடைமுறைப் படுத்தும்போது தான் இதன் அருமை புரியும். அந்தந்தக்கால நிலவரப்படி, சமுதாயம் எதை விரும்புகிறது என்பதைப் புரிந்து கொண்டு, பண்புகளைப் பற்றிப் பேசுவதைக் கண்ணியமாகக் கருதி பேசுபவர் களும் உண்டு. அதே சமயம், அழுத்தமாகவும், வலியுறுத்தியும் பேசமுடியாத நிலை ஏற்படுவதையும் காண முடிகிறது. இத்தகைய பலவீனம் இருக்கும் வரையிலும் பண்புகள் நடைமுறையில் வரமுடியாது. இக் கட்டுரையின் படைப்பாளர் இவ்வாறு கூறு கின்றார். பண்புகளைப்பற்றி வலியுறுத்திக் பறை சாற்ற முடியாத சமுதாய சூழ்நிலை. அப்போது நடத்தை விதிகள், மனோ பாவம், மனோ நிலை (Moral values, Attitudes and moods) பற்றிய பிரசுரங்களை பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் அச்சிட விரும்பி, பிரசுரங்கள் அச்சிடுவோரை அணுகியபோது, அவர்கள் மிகவும் தயக்கம் காட்டினார்கள். சூழ்நிலை சாதகமாக இல்லை. புத்தகங்கள் அவ்வளவாக விற்பனை ஆகாது, நஷ்டம் ஏற்படும் என்று கூறிவிட்டார்கள். ஆனால் இப்போதோ இந்த நிலை வேறு., இப்போது பண்புகளின் அவசியம் பற்றி ஆங்காங்கே கூடிப் பேசப்படும் முக்கிய பொருளாகப் பிரபல்யமாகி விட்டது. ஐ.நா.விலும் கூட தனது 15ம் ஆண்டு விழாவின் போது சகிப்புத் தன்மை (Tolerance) அவசியம் என அறிவித்தது. 1971ம் ஆண்டு நியூயார்க்கில் சுற்றுச்சூழல் மாசு (Environmental Pollution) மற்றும் மனமாசு (Mental Pollution) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். இதனைப் பிரசுரிக்க வேண்டும் என்று ஒரு பிரபல பத்திரிகையை நாடினேன். அவர்கள் முடியாது, மன்னிக்கவும் என்று தனது வருத்தத்தைத் தெரிவித்தார்கள். ஏனெனில் அன்றைய சூழ்நிலை அப்படிப் பட்டதாக இருந்தது. இப்போது இது குளோபல் அஜெண்டாவில் நம்பர் 1. தலைப்பாக ஆகிவிட்டது. பன்னாட்டு மாநாடுகளில் கூட பிரபல பேச்சாளர்கள் மன மாசு பற்றி பேசுவதைப் பார்க்க முடிகிறது. பிரம்மா குமாரிகள் வெளி யீடான ஞானாமிருத பதிப்புகளில் ஆன்மீகம் மற்றும் பண்புகள் பற்றி கார்ட்டூன்கள் வெளியிடப் பட்டன. அந்த சமயத்தில் இப்படிப்பட்ட கருத்துக்களை வலியுறுத்தும் கார்ட்டூன்கள் வேறு

பத்திரிகைகள் அல்லது வெளியீடுகளில் காணப்படவில்லை. அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் தான் இது மாதிரி கார்ட்டூன்கள் வெளி வர ஆரம்பித்தன.

இரண்டாவது ஒரு சிலர் அவசியமான நேரத்தில் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டிய அவசியம் பற்றி பேசுகின்றார்கள். ஆனால் இவர்கள் முன்னுதாரணமாக தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறார்களா அல்லது இல்லையா? அல்லது பெருமைக்கும், புகழுக் காகவும் பேசுகிறார்களா என்பது தெரியவில்லை. நடைமுறைப்படுத்தப்பட்டால் வெளியில் தெரியாமல் இருக்காது. ஒருவேளை மாறாக இருந்தால் இவர்களை முகமூடி மனிதர்கள் என்று மக்கள் பட்டம் சூட்டி விடுவார்கள். ஒரு வேளை பாசாங்கு செய்கிறார்கள் என்பது தெரிந்து விட்டால் பொது மக்களின் மதிப்பையும் இழந்து விடக்கூடும். யாரொருவர் பண்புகளை மதித்து நடக்கிறார்களோ, அவர்கள் தான் உண்மையில் பண்புகளை மதித்து, அதன் மதிப்பை உயர்த்து பவர்களாக, விருத்தி செய்பவர்களாக, நாணயத்தின் நண்பர்களாக இருப்பார்கள்.

ஆதலால் குறிப்பாக, இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொள்ளலாம். ஒன்று பண்புகளைப் பற்றிப் பேசுபவர்கள். அதனை மதித்து நடைமுறையில் கடைப்பிடிப்பது, இரண்டாவது பண்புகளைப் பற்றிப் பேசுபவர்கள், அப்படிப் பேசும்போது, இனிமேல் இதனை நான் மதித்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பேன் என்று உறுதி மொழி தருவது. இதன் மூலம் முடிந்த வரை முயற்சி செய்யும் பழக்கம் உண்டாகும். பயனுள்ள மாற்றம் உண்டா வதற்கும் அஸ்திவாரம் அமையும். இது மற்றவர்க்கும் செய்யும் நாணயமுள்ள சேவையாகவும் இருக்கும்.

நாணயம் எனும் பண்பு மற்ற நற்குணங்கள் வளர்வதற்கும் மனதை தயார் செய்யும். இவ்வாறாக பண்புகள் மென் மேலும் வளரும். வலுப்பெறும். வேகமாகவும் முன்னேறும். இப்படி ஒருவர் பண்புகளை மதித்து நடக்கும் போது மற்றவர் மத்தியில் அவரின் மதிப்பு உயரும். யாரொருவர் பண்பாளராக இருக்கின்றாரோ, அவர் இயல்பாகவே மற்றவர் உள்ளத்தில் அமர்பவராக ஆகிவிடுவதோடு, கடவுளின் அருகாமையிலும் இருப்பவர் ஆகிவிடுவார். நாணயமுள்ள ஒருவரிடம் உண்மை, நேர்மை, எளிமை, கபடமின்மை ஆகிய குணங்கள் இயல்பாகவே இருக்கும். இதன் காரணமாக, இதுவரையிலும் ஏதேனும் சூது, வாது, வஞ்சனை போன்ற எதிர்மறை தீய குணங்கள் இருந்திருக்குமே யானால், கூட அவை கூட்டை விட்டு வேகமாகவே வெளியேறி விடும். இதனால் மனதிற்கு சுதந்திரம் கிடைத்து விட்டது, இது முழுமையான தூய்மைக்கு அஸ்திவாரம். ஆதலால் மனதில் நாணயமுள்ள வராக இருக்க வேண்டும் என்பதை மனப்பூர்வமாக, உற்சாகத் துடன் ஏற்றுக் கொள்வோம், கடைப்பிடிப்போம். நல்லது. செய்ய நாள் பார்த்துக் காத்திருந்தால் இப்போது ஆரம்பிக்கலாமே!

## புரிந்து கொள்ளல்

*அநேகர் தங்களைப் புரிந்து கொள்வதே இல்லை. தங்களைப்பற்றியோ அல்லது மற்றவர்களைப் பற்றியோ புரிந்து கொள்வதில் பொறுமை இல்லை. இதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். நாம் அடிக்கடி பொறுமையை இழந்து விடுகிறோம். காரணம் என்னவெனில், இதற்காக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் விருப்பமில்லாதவர்களாக இருக்கிறோம். இதனால் தவறான அபிப்பிராயம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மேலும் பிறர் கூறுவதை அமைதியாக செவி சாய்ப்பதில்லை. புரிந்து கொள்ளவும் முயற்சி செய்வதில்லை. பிறகு மற்றவரை அனுமானிக்கிறோம். ஆதலால் மற்றவரைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் நேரம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது.*

## மறக்க முடியுமா, பாபாவை

பி.கு.சாய்ராம், திருத்தணி

மண்ணிற்கு ஓர் மகாத்மா - பாரத
மண்ணிற்கு ஓர் மகாத்மா
மனதிற்கு ஓர் பரமாத்மா - சுதந்திர
மனதிற்கு ஓர் பரமாத்மா
**மறக்க முடியுமா பாபாவை!**

கலியுக முடிவினில்,
காரிருள் வேளையில்
கருணை மிகக் கொண்ட
கனிவான ஞானம் தருகின்றார்
**மறக்க முடியுமா பாபாவை!**

கர்மத்தின் விதி தன்னை - மன
தர்மத்தின் வழி நடத்தி - கால
மர்மத்தின் நிலை கூறும்
தர்மத் தந்தையாக வந்திட்டார்
**மறக்க முடியுமா பாபாவை!**

தந்தையாய் இருந்த ஆத்மாவின்
சிந்தையில் ஞானம் தந்தே
விந்தைகள் பலபுரிய வைத்து - ஆத்ம
சொந்தம் கொண்டாடி மகிழும் தந்தை
**மறக்க முடியுமா பாபாவை!**

கஷ்டத்தில் உழன்ற நம்மை
இஷ்ட தேவதைகளாக்கிடவே
அஷ்ட சக்திகளின் ஞானம் அளித்து
நஷ்டமோக நிலை உணர்த்தும் தந்தை
**மறக்க முடியுமா பாபாவை!**

பக்தி பலவே புரிந்தும் - ஆத்ம
சக்தி இழந்த வேளையில் - ஜீவன்
முக்திக்கு வழி காட்ட - யோக
யுக்தியை நல்கும் அன்புத் தந்தை
மறக்க முடியுமா பாபாவை -வாழ்வை
**சிறக்க வைக்கும் பாபாவை**
**மறக்க முடியுமா?**

## தைரியம்

நான் தைரியசாலியாக இருக்க வேண்டும். இந்தப் பொய்யான உலகில் எனக்கு நான் உண்மையாக இருக்க வேண்டும் என்றால், இது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. எனினும் ஆன்மீகக் கல்வியைக் கற்பதன் நோக்கமே தைரியமாக இருப்பதற்குத்தான். நான் எதில் நம்பிக்கை வைத்திருக்கிறேனோ, அதில் தைரியத்துடன் நிலைத்திருக்க வேண்டும்.

எனது ஆதி இயல்பு அமைதி மற்றும் தெய்வீகம் ஆகும். இதை அனுபவம் செய்வது என்பது எனது உள்ளார்ந்த மதிப்பு மிக்க யோக்கியதையில் நம்பிக்கை வைத்திருப்பதாகும். அப்போது இந்த நம்பிக்கையின் ஆதாரத்தில் நான் எதையும் எதிர் கொள்ள முடியும். அநேகர் தங்கள் உயர்ந்த நிலையை நம்புவதற்கு சிரமப்படுகிறார்கள். இன்னும் சிலரோ, எதிர்காலம் பற்றி நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார்கள்.

தன்னை உணர்ந்தால், சந்தேகங்கள் விலகிப்போகும். எனது ஆதி இயல்பு அமைதி. நான் எனது கர்மேந்திரியங்களின் அடிமை அல்ல. (நான் அதன் படைப்பாளி). இந்த வாழ்க்கை நாடகத்தில் நான் சாட்சியாகவும், நடிகராகவும் இருக்கிறேன். என்ன நடக்கிறதோ அது நன்மைக்குத்தான். எனது வாழ்க்கையில் இந்த உண்மைகளை இணைத்துக் கொணடால் எனது தைரியம் என்னை ஒருபோதும் கைவிடாது.

# மாற்றம் என்பது மனவுறுதியில் மையம் கொண்டுள்ளது

மாற்றம் வேண்டும் என்று எல்லோருமே விரும்புகிறார்கள். ஆனால் எந்த ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமானாலும் அதை நிறை வேற்று வதற்கு இதற்கான மனவுறுதியும், பின் தங்கி விடக்கூடாது என்பதில் ஆர்வமும், அக்கறையும் அடிப்படையான அவசியமாகும். இதன் மூலம் மனவுறுதியைத் தளர்த்தக்கூடிய அல்லது சோதிக்கக்கூடிய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு நினைத்ததை சாதிக்க முடியும். இதற்கு மாறாக கவனக்குறைவு உண்டானால் மனவுறுதியில் தளர்வு ஏற்படும். மேலும் தன்னால் முடியாது என்ற தோல்வி மனப்பான்மைக்கும் இடம் கொடுத்தாற்போல் ஆகிவிடும். சூட்சுமமாக சுய பலவீனமும் ஏமாற்றி விடும். ஆதலால் எந்த ஒரு புயலையும் அங்கதனைப்போல அசைக்க முடியாத உறுதியுடன் இருக்க வேண்டியது மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஏனெனில், நான் அவசியமான மிக உயர்ந்த இலக்ஷியத்தை அடைய வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டு மனதில் உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ளேன். எனது நல் வாழ்வுக்கு உத்தரவாதமுள்ள எல்லாம் வல்ல பரம தந்தை யிடம் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன் என்று மனப்பூர்வமாக வாக்குறுதி அளித்திருக் கிறேன். ஆதலால் இதில் எனது கௌரவம் அடங்கியுள்ளது. இதனை உணர்ந்திருப்பதால் எந்த ஒரு எதிர் மறை சக்திக்கும் கைப் பொம்மையாகி அடிமைப்பட்டு விட மாட்டேன். எனது பார்வை, எனது உணர்வுகள், எனது அணுகுமுறை, எனது பழக்கம் எப்போதும் ஆக்கப்பூர்வமானதாகவே இருக்க வேண்டும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருப்பேன். ஏனெனில் மனதார ஏற்றுக் கொண்டு, எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நானே மதிக்கா விட்டால் எனது கௌரவம் கேள்விக்குறியாகி விடாதா?

ஒரு கணம் சிந்திப்போம். ஒருவேளை தோல்விக்கு ஆளாகி விடநேரிடுமேயானால், இதற்கு காரணம் என்னவாக இருக்கும்? கொடுத்த உறுதிமொழிப்படி நடப்பதை தாமதப்படுத்துவதாகும். ஏன் இந்த தாமதம்? இது வரையிலும் தானே விரும்பாத ஏதாவதொரு பழக்கத்திற்கு வசப்பட்டிருக்கலாம். இதனை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக எடுக்க வேண்டிய முதலாவது அடியைக் கூட எடுத்து வைக்காமலே இருப்பது. இதனால் தோல்வி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. மனம் இன்னும் குழப்பத்திலேயே தான் இருக்கிறது. இதனால் தன்னம்பிக்கையில் தளர்வு உண்டாகிறது. இதனால் தன்னால் வெற்றி பெறமுடியுமா? என்ற பயமும் சேர்ந்து கொள்ள தன்னம்பிக்கை இழந்தவராக, தனக்குத்தானே சமாதானம் செய்து கொள்கிறார். எப்படி? நான் இனி எனது முயற்சியை விட்டு விடப்போவதில்லை. நிச்சயமாகப் போராடி வெற்றி பெறுவேன். எனக்கு ஒரு நல்ல நேரம் வரும். விரை விலேயே எனது முயற்சியை மீண்டும் தொடங்கு வேன். தீவிர முயற்சி செய்வேன்.வெற்றியும் அடைவேன். இந்த நல்லெண்ணம் மெச்சத்தகுந்த ஒன்று தான். சந்தேகமில்லை.

ஆனால் தான் முயற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணியிருந்த அந்த நாள் வரும். அப்போது தனது பலவீன சுபாவத்திற்கு அடிமையாகி, இன்னொரு நல்ல நாளுக்காக ஒத்தி வைக்கும் சூழ் நிலைக்கு இடம் கொடுத்து விடக்கூடாது. இப்படிப்பட்ட அனுபவம் அநேகருக்கு இருக்கலாம். தோல்வி தான் அனுபவத்திற்கும், பலத்திற்கும், வெற்றிக்கும் கூட அடிப்படை என்று கூறுவதுண்டு. எனினும் இதிலும் மனவுறுதிக்குத்தான் முதலிடம்.

முடிவாக நமது நன்மைக்காக, உலக நன்மைக்காக நாம் நமது சம்மதத்துடன் இவ்வாறு ஊர்ஜிதப்படுத்திக் கொள்வோம். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், நான் விழுந்து விட மாட்டேன். எனது மனவுறுதி. எஃகை விட, கருங்கல் பாறையை விட உறுதி யானது. இனிமேல், எனது கவனக் குறைவால், எந்த ஒரு தவறும் என்னால் ஏற்பட இடம் தரமாட்டேன். எனது முயற்சிகள் மென்மேலும் ஏறுமுகமாகவே இருக்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்தவிதமாக நல்லதை விரும்புகின்ற ஒவ்வொரு மனிதனும், தனது சுய மாற்றத்தில் கவனமுள்ளவராக செயல்படும்போது, சமுதாயமும் மாறித்தானே ஆக வேண்டும். மேலும் உலக அமைதியையும் நல்வாழ்வையும் விரும்பும் ஒவ்வொருவரும் தன்னை மாற்றிக் கொள்வது, தன்னுடைய பொறுப்பு எனக்கருதி உறுதிமொழி எடுத்துக் கொள்வாரேயானால் உலக மறுமலர்ச்சிக்கு இதைவிட வேறொரு வழி ஏதேனும் உண்டா?

## புத்திக்கூர்மை

நான் உண்மையிலேயே ஞானமுள்ள ஆத்மாவாக இருந்தால் இதைப்பற்றிய அறிவிற் சிறந்தவனாக இருப்பேன். தன்னை உணர்ந்திருப்பதால் புருவ மத்தியில் நிலைத் திருப்பேன்.

நான் எனது கடந்த கால செயல்களின் பிரபாவத்திலிருந்து விடுபட்டவனாக இருப்பேன் ஆதலால் எனக்குள் அமைதியும், மகிழ்ச்சியும் மட்டுமே இருக்கும். உண்மை யான ஞானம் என்பது அறிவு பூர்வமாக அறிந்திருப்பது மட்டுமல்ல, இதனை மேம்படுத்திக் கொள்வதற்காக, எனது அன்றாட வாழ்க்கையில் இது இணைந்திருக்கவும் வேண்டும். இதன் மூலம் எனது எண்ணம், சொல், செயல், ஆகிய மூன்றும் இயல்பாகவே பிரபஞ்சத்தின் இயற்கை சட்டத்தோடு ஒத்ததாக ஆகிவிடும்.

இதுவரையிலும், தவறானதாக நடந்ததெல்லாம் கூட சரியானதாக நடக்க ஆரம்பித்து விடும். இவ்வாறு அறிந்திருக்கும் போது மற்றவரைச் சாதாரணமானவராகப் பார்ப்பது, குறைத்து மதிப்பிடுவது போன்ற குறைபாடுகளிலிருந்து என்னைக் காப்பாற்றும். மேலும் ஒவ்வொருவரிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிக்கும். இதன் காரணமாக எனது சக்தியை இழந்து விடமாட்டேன். இவ்வாறு நடப்பது, தன்னைப்பற்றி ஆழமாகப் புரிந்து கொண்டிருப்பவருடைய கடமையாகும்.

அறிவு சம்மந்தமான அகங்காரம். இன்னும் அறிவு பூர்வமானவராக ஆகவில்லை என்பதன் அடையாளமே. உண்மையான ஞானம் வாழ்க்கையில் இனிமையை அனுபவம் செய்ய உதவுகிறது. இனிமையுள்ளவராகவும் ஆக்கிவிடுகிறது.

# முற்பிறவியின் நினைவு - ஏன்? எப்படி?

**(ஞானாமிர்த இதழ் ஆசிரியர் பி.கு. ஆத்மபிரகாஷ் அவர்களுடைய அக்டோபர் இதழில் வந்த கட்டுரையின் தமிழாக்கம்)**

மனித வாழ்க்கை நினைவுகளின் ஒரு மூட்டை (பொம்மை). எந்தளவு உங்களுக்கு ஞாபகம் உள்ளதோ அந்தளவே உங்களுடைய வாழ்க்கை. நினைவு என்பது போய்விட்டால் (மறதி) உயிர் இருந்தும் கூட மனிதன் எலும்பு சதையாலான உயிரற்ற ஒரு உருவமாகவே காணப்படும் (ஜடம்)

தற்காலத்தில் பௌதீக அறிவியலின் கூடவே ஆத்மீக அறிவியலும் கூட முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக் கிறது. மக்கள் ஆத்மா, பரமாத்மா, மறு ஜென்மம் போன்ற விஷயங்களின் மீது சிந்தனை செய்யவும் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். ஒரு சில குழந்தைகளுக்கு முந்தைய ஜென்மத்தின் விஷயங்களைக் கூற முடிகிறது. மற்ற குழந்தைகள் முந்தைய ஜென்மத்தின் விஷயங்களை மறந்து விடுவது ஏன் என்ற கேள்வி அந்த ஆர்வத்தினிரிடையே எழுகிறது.

இந்த கேள்விக்கான பதிலின் ஒரு பகுதி - பிறவி எடுக்கின்ற போது ஆத்மாக்களின் நடிப்பின் ஒரு சிறு பங்கு படைப்பு மற்றும் டிராமாவின்படி நேராகவே பரந்தாமத்திலிருந்து இறங்கி வருகிறது. அவர்களுக்கு (இந்த கல்பத்தில்) முன் பிறவி என்று எதுவும் இருப்பதே இல்லை. யாருக்கு முன்பிறவி இருந்ததோ அவர்களுக்கு அப்பிறவியின் நினைவு என்பதென்னவோ இருக்கிறது, ஆனால் சில தெளிவாகவும் மற்றும் சில தெளிவற்ற தாகவும் இருக்கும். தெளிவு, தெளிவற்றது என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு முன்பாக நினைவின் முக்கிய அடிப்படையான மூன்று விதங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

### சொற்ப காலத்திற்கு இருக்கின்ற நினைவு:

இது அல்ப காலத்திற்கு மனம்-புத்தியில் இருக்கும் பிறகு மறைந்து விடும். உதாரணமாக நம்முடைய பிரியமான உறவினர் சம்மந்தப்பட்ட யாரோ ஒருவர் நம் ஊருக்கு வரவிருப்பார். அவர் வரக்கூடிய பேருந்தின் எண் HR 01235 என்று வைத்துக் கொள்வோம். நாம் இந்த எண்ணை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறோம், பேருந்து நிலையம் சென்று வருகின்ற போகின்ற வாகனங்கள் மீது பார்வை செலுத்துகிறோம். எதிர்பார்த்த அந்த பேருந்து வந்து விட்டது. நம்முடைய உறவினர் அதிலிருந்து இறங்குகிறார், அவரை நம் வாகனத்தில் அமர வைத்து வீட்டிற்கு அழைத்து வருகிறோம். இப்போது நமக்கு அந்த பேருந்தின் எண் மறந்து விடு கிறது. வாழ்க்கையில் இதுபோல நிறைய நாட்கள், நேரம், நிமிடம் நினைவில் இருக்கிறது. அந்த நினைவு நிச்சயமற்றதாகவோ அல்லது அரை குறையாக மனதில் இருக்கலாம் ஆனால் மறந்து போவது மனிதர்களின் இயல்பு மறந்து போகாமல் இருந்தாலோ புத்தி தான் கெட்டுப் போகும்.

### நீண்ட காலம் இருக்கின்ற நினைவு:

எவ்வாறு ஒரு மனிதன் ஏதோ ஒரு க்ஷேத்திரத்தின் சிறப்பினை தெரிந்து கொள்வதற் காக மற்றொருவரிடம் அறிவுரைகள் (விவரங்கள்) பெறுகிறார், தெரிந்து கொண்ட விஷயங்களை அடிக்கடி திரும்ப திரும்ப சொல்லிப் பார்த்து, எழுதி வைத்து அவற்றை நினைவில் வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார், இதனால் அந்த விவரங்கள் காரியத்திற்குப் பயன்படும். பலவித அரசாங்க கோப்புகள் (Documents) சான்றிதழ்கள், பத்திரங்கள் முதலானவை மீண்டும் மீண்டும் காரியங்களுக்குத் தேவைப்படு கின்றனவோ அவற்றின் விவரங்கள் நீண்டகாலத்திற்கு நினைவு கொள்ளப்படுகிறது. (பொருட்களின்) இருப்பை அதை பராமரிப்பவர் கைவசம் அல்லது பண்டக சாலையில் உள்ள பொருட்களை நினைவில் வைத்துக் கொள்கிறார். இவை

யனைத்தும் நீண்ட காலத்திற்கான நினைவுகள் எனக் கூறப்படுகிறது. ஆனால் ஒருவேளை இந்த நினைவுகள் கூட பல காலமாக உபயோகத்தில் வரவில்லையெனில் மறந்து விடு கிறது. எப்படி முக்கியமான விவரங்கள் அடங்கிய பதிவேடுகள் ஒரு கோப்பில் (ஃபையில்) வைக்கப் பட்டு பல வருடங்கள் பயன்படுத்தாமலிருந்து பிறகு ஒரு சமயம் தேவைப்படும்போது அந்த கோப்பை வைத்த இடம் மறந்து விடுகிறதோ அதுபோல.

இதுபோன்ற ஒருவர் ஏதோவொரு தேவையற்ற விஷயத்தை மனதில் வைத்துக் கொண்டு திரும்ப திரும்ப அதையே எண்ணி பைத்தியம் போல காரியங்கள் செய்தால் மருத்துவர் மின் அதிர்வு கொடுத்து அதை மறக்கச் செய்கின்றார். ஒரு விபத்தில் மூளையில் பலமாக காயமோ ஆழமான அடியோ ஏற்பட்டி ருந்தாலும் கூட அம்மனிதனுடைய நினைவாற்றல் போய்விடுகிறது. இவ்வாறு வேறு பல காரணங்களாலும் நீண்டகாலமாக நினைவிலி ருந்த விஷயங்கள் இயல்பாகவே அப்பொழுதே மறந்து விடுகின்றன, எனவே இதுவரையிலுமே எப்படி நினைவிருக்கும்.

### அவ்யக்த நினைவு:

அவ்யக்தம் அதாவது மறைந்துள்ள, ஆழ்ந்த உறக்கத்தில், சம்ஸ்கார ரூபத்தில் பொதிந்துள்ளது அதன் அடையாளம் இருக்கக் கூடும். அது நடத்தையில் மற்றும் பழக்க வழக்கத்தின் ரூபத்தில் பளபளக்கும் (ஜொலி க்கும்) அதன் அடையாளம் காணப்படுகிறது. ஆனால் முழுமையான உணர்வு, நினைவு மனதில் இருப்பதில்லை.

ஒருவர் ஒரு தடவை இரயில் நிலையத்திற்குச் சென்றார். ஆனால் ஒரு நிமிடம் தாமதமாகச் சென்றதால் அவர் செல்லவிருந்த புகை வண்டி சென்று விட்டது. அதனால் அவருடைய மிக முக்கியமானதொரு காரியம் வெற்றியடையாமல் போனது. அதன் பிறகு தன் தவறை உணர்ந்தார் மற்றும் வாழ் நாள் முழுவதும் எப்பொழுதெல்லாம் புகை வண்டியில் செல்ல வேண்டுமோ அப்பொழுது 15 நிமிடங்கள் முன்பாகவே புகை வண்டி நிலையம் சென்று அமர்ந்து விடுவார். சமயத்திற்கு முன்னதாகவே செல்லக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். எந்த ஒரு காரியத்தின் விளைவு (முடிவு) சொரூபமாகவே ஆகிவிட்டதோ அந்த காரியம் மறந்தது விடுகிறது. இருப்பினும் சம்ஸ்காரமாக (தெளிவற்ற நினைவாக) தென்படும். ஒரு சிறு குழந்தை இருட்டில் மாடிக்கு செல்ல பயப்படுகிறது, மற்றொனறு ஓடோடி செல்கின்றது ஒரு சிலர் பௌதீக ரூபத்தில் வேகமாக இருக் கிறார்கள், சிலர் ஸ்தூல காரியங்களில் திறமைசாலி களாக, சிலருக்கு விளையாடுவதில், சிலருக்கு இராணுவ வீரர் போல உடை அணிவதில், சிலருக்கு கோவிலுக்குச் சென்று தியானம் செய்வதில் மற்றும் சிலருக்கு ஹார்மோனியம் இசைப்பதில் ஈடுபடுவது நல்லதாக தோன்றுகிறது. சிலர் அதிகம் பேசாத குழந்தையோடு நட்பு கொள்கிறார்கள், சிலர் வாயாடியோடு நட்பு கொள்கிறார்கள். இவை யெல்லாம் நம்முடைய அவ்யக்த நினைவின் விஷயங்கள் சம்மந்தப் பட்டது. இவற்றை சம்ஸ்காரம் என்று நாம் சொல்கிறோம். இதன் அடிப்படையில் மறுபிறவி எவ்வாறு இருக்க முடியும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இதுபோல சம்ஸ்காரம் மற்றும் பழக்க வழக்கங்கள் ஒவ்வொருவரிடமும் உண்டு. இதன் காரணமாகத்தான் ஒருவருடைய விசேஷத் தன்மை மற்றவருடையதிலிருந்து வேறுபடுகிறது..

### புதிய பிறவியின் அன்பு பழைய முந்தையை பிறவியை மறக்கச் செய்கிறது:

ஒரு குழந்தை பிறவி எடுத்த பிறகு அதற்கு தாய்-தந்தை, புதிய வீடு, புதிய சூழ்நிலை அமைகிறது. இந்த பிறவியில் குஷியின் கொண்டாட்டம், தாய்-தந்தை, உற்றார்-சுற்றத்தார் அக் குழந்தைக்கு அளவில்லா அன்பை பொழிகின்றனர் எனும் போது இப்படிப்பட்ட சூழ்நிலையின் இடையே முன் பிறவியின் நினைவுகள் திரும்புவதற்கு வாய்ப்பே இல்லை. பிரம்மா குமாரிகளின் தலைமையகத்திற்கு வருபவர்களுக்கு நிமித்தமாக உள்ள தாதி மார்கள், மூத்த சகோதரிகள், சகோதரர்கள்

இவர்களுடைய அந்தளவு சிநேகம் கிடைக்கிறது, மேலும் கூறுகிறார்கள் இங்கு வந்த பிறகு நாட்கள், மாதங்கள், வீடு பரிவாரம் அனைத்தும் மறந்து விட்டோம். இதை நாம் அனைவருமே அனுபவித்துள்ளோம். இந்த பிறவியில் இதே சரீரத்தில் இதே உலகத்தில் வசித்துக் கொண்டி ருந்தாலுமே வீடு-பரிவாரம், ஊர் முதலியவற்றை சொற்ப காலத்திற்கு மறந்து விடுகிறது. எனவே குழந்தை புதிய வீட்டில் பிறவி எடுத்த பிறகு அந்தளவு அன்பு கிடைக்கிறதெனில் முன் பிறவியை ஏன் மறக்க மாட்டார்கள்?

**கர்மேந்திரியங்கள் சிறியதாக இருப்பதன் காரணமாகவும் எதையும் மறக்க முடிகிறது.**

மரணம் ஏற்பட்டதால் பழையவை அனைத்தும் விடுபட்டுப்போகிறது. இதுவும் கூட ஒரு பெரிய நிகழ்வு. மரணமடைந்து விட்டால் பெயர், உருவம், தேசம், காலம் அனைத்தும் மாறிவிடுகிறது. எப்படி ஒரு புகைப் படத்தின் மீது மற்றொன்றை வைத்து மறைத்து விட்டால் அந்த நபரின் வாழ்க்கை, நினைவு எல்லாம் போய்விடுகிறதோ அதுபோல். கர்ப காலத்தில் ஏறத்தாழ ஆறு மாதமாகும் வரை அதனிடம் முழு வளர்ச்சியடைந்த மூளை இருக்காது. அந்த இருளடைந்த அறையில் அதனுடைய (சிசுவின்) நினைவுகள் மேலும் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறது. இருப்பினும் சில நினைவுகள் தப்பித்து இருந்தாலும் அந்த சிறிய குழந்தை தன்னுடைய எந்த ஒரு விஷயத் தையும் தெளிவு படுத்த முடியாது. கைக்குழந்தை திடீரென சிரிக்கின்றது, சில சமயம் அழுகின்றது, என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இவை யெல்லாம் முன் பிறவியின் ஆதாரத்தில் ஏற்படு கிறது. ஆனால் அதற்கு எதுவும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. காரணம் உறுப்புகள் சிறியதாக (வளர்ச்சி அடையாமல்) இருப்பதால். இதன் பிரகாரம் அதிக நேரம் விஷயங்களை தெளிவாகக் கூற முடிவதில்லை. காரணம் அவை மறந்து போய்விடுகின்றன.

**முன்பிறவியைப் பற்றி கூறுபவர்கள் விதி-வலக்கானவர்களாகின்றனர்:**

முன்பிறவியின் விஷயங்களைக் கூறுபவர்கள் விதிவிலக்கானவர்களாகிறார்கள். அவர்கள் தங்களுடைய பழைய விஷயங்களை தன்னிடம் வைத்திருப்பதையே சொல்கிறார்கள். பூர்வ ஜென்மத்தை கூறுபவர்களில் அதிகமான குழந்தைகள் - இந்த வீடு எனக்கு பிடிக்க வில்லை என்பதையே சொல்கிறார்கள். பழைய வீட்டில் யாரெல்லாம் இருந்தார்களோ இப்போது ஏழை வீட்டில் பிறவி எடுத்துள்ளனர். அவர் களுக்கு புதிய வீட்டில் பழைய வீட்டில் கிடைத்த அளவிற்கு சுகம், அன்பு, அமைதி கிடைப்பதில்லை அல்லது அவர்களுக்கு அங்கிருந்த குழந்தைகள் மனைவி ஆகியோருடன் எந்த அளவு மோகம் (பற்று) இருந்ததோ அவ்வளவு புதிய வீட்டில் உள்ளவர் களோடு ஒட்டுதல் (பிணைப்பு) இல்லை. அவர்கள் புதியதை ஏற்கவில்லை மற்றும் பழையதையே உருவகப்படுத்திக் கொண்டிருப் பார்கள், அவர்கள் தான் முன் பிறவியைப் பற்றி கூற முடியும்.

**முன்பிறவியின் மறதி ஒரு வரதானம்:**

முன் பிறவி மறந்து விடுவது மனித வாழ்க்கைக்கு ஒரு வரமாகும். இல்லை என்றால் முற்பிறவியின் உறவு-பகை , மோகம்-பற்று இவற்றின் விவகாரங்களிலேயே இந்த பிறவியிலும் கூட சிக்கிக் கொண்டிருப்பார்கள். யாரையேனும் பார்க்கும்போது அவர் முன்பிறவியில் என்னிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி இருந்தார் என்ற பழைய நினைவு வந்து அவரிடம் கடனை திரும்பத் தர கேட்டுக் கொண்டே யிருப்பார். வேறொருவரை பார்க்கும்போது இவர் முன் பிறவியில் என்னை அடித்து விட்டார் அதற்கு பழி வாங்க வேண்டும் என்று அடம் பிடிப்பார். இவ்வாறு அவர் குழந்தை பருவத்தின் அல்லது புதிய பிறவியின் எந்தவொரு ஆனந்தத்தையும் அனுபவிக்க முடிவதில்லை. பழையதை மறந்து புதிய பிறவியை துவங்குவது இது தான் இயற்கையின் அழகான விதி. (பழையன கழிதலும் புதியன புகுதலும் - இது தான் பழமொழி)

# ஆன்மீக உணர்வில் யோகத்தில் நிறைவு காணல்

பி.கு. துர்காபிரசாத், மவுண்ட் அபு

அமிர்தவேளையிலிருந்து பாபாவின் அன்பு, தூய்மை, மகிழ்ச்சி நிரம்பிய கதிர்களை எப்பொழுதும் உலகில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தால், தானாகவே மன்மனாபவ நிலையை நாம் அடைய முடியும் என்கிறார் பாபா. இவ்வாறான முழுமையான தொடர்பு தந்தையிடம் இயல்பாக நம்மால் நிலைப்படுத்திக் கொள்ள முடிகிறதா? நம்மில் இப்பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான நேரம் நெருங்கி விட்டது. இந்த நிலை வளர்த்துக் கொள்ள இராஜயோகத் தியானம் மூலம் நம்மிடம் ஆன்மீக உணர்வுகளை வளர்த்துக் கொள்வது ஒன்றே சரியான வழியாகும். உயர்ந்த மாடிகள் கொண்ட கட்டிடத்தை எழுப்ப வேண்டு மென்றால் அடித்தளத்தை மிக ஆழமான தாகவும், வலுவுடையதாகவும் அமைத்துக் கொள்ள வேண்டும். அதைப்போலவே யோக மானது மேல் நிலையில் அமைய நம் உள் மன நிலையானது ஆழமான அமைதியைக் குடிக்கொண்டதாக இருக்க வேண்டும். சரியான மன நிலையே பாபாவிடம் அவ்வாறு அன்பில் லயித்திருக்க வழிகோலும்.

ஒரு நாளில் எவ்வளவு நேரம் ஆன்மீக உணர்வில் பாபாவை நினைவில் கொள்ள முடிகிறது. இதற்காக நம் நடைமுறை கோட்பாடுகளை நாம் சரிப்பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, நாம் ஸ்ரீமத்தை பின் பற்றுவதில் ஏதாவது தவறுகள் இருக்கின்றனவா? எவ்விதமான பொருட்களின் மீதான விருப்பங்களால், நம்முடையத் தனிச் சிறப்புகள், அல்லது மற்றவரின் தனிச்சிறப்புகள் இவைகளால் நாம் பாதிக்கப்படுகிறோமா? நம்முள் படிந்து போன பழைய சம்ஸ்காரங்கள் இனியும் நமக்குத் தீங்கு விளைவிக்கின்றனவா? நம்முடைய அளவில்லாத வைராக்கியத்திலிருந்து எவ்விதமான சூழ்நிலைகள் அல்லது நிகழ்ச்சிகள் நம்மை நிலை தடுமாறச் செய்கின்றனவா? ஆகியவைகளை பற்றி யோசிக்க வேண்டும். பாபா எல்லாப் பிணைப்புகளிலிருந்தும் நம்மை விடுவிக்க விரும்புகிறார், முக்கியமாக, தன் மீது தான் ஏற்படுத்திக் கொண்ட பற்று, ஒருவரை சூட்சும நிலையில் வெகுவாகப் பாதிக்கிறது. எவ்வாறான சூட்சும மனநிலைகளினாலும் பாதிக் கப்படாமல் நம் வைராக்கியத்தை அளவில்லாத நிலையில் வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமானது ஆகும். வைராக்கிய நிலையை நாம் வளர்த்துக் கொள்ளல் என்பது ஒன்றாகும். மற்றது, பாபாவினிடத்தில் முற்றிலும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் நம்பிக்கையும், பாவனையும் தேவைப்படுகிறது. பாபாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விரும்புபவர், இவ்வாறு எவை எல்லாம் நம்மை அவர் நினைவிலிருந்து தூரமாக்குகின்றனவோ அவற்றை எல்லாம் அறிந்து விலக்கியே தீர வேண்டும். இதற்காக மூன்று படிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

முதலாவது: ஆதிகாலத்தின் ஆரம்பத்தில், சத்யுகத்தில், நாம் பிறவி எடுக்கும் பொழுது எதுவுமே இன்றி எந்த உடையுமில்லாமல் ஆன்மாவாக, நட்சத்திரமாக, பஞ்சத் தத்துவங் களினாலான உடலில் வந்தோம். போகப் போகப் பிறவிக்குக் பின் பிறவி எடுத்து நம் சுமைகளை வளர்த்துக் கொண்டே போகிறோம். நான் எனது எனும் வார்த்தைகள் உலகில் நமக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன என நம்பினோம். ஆனால் இறுதிக்காலம் நெருங்க, நெருங்க ஆத்மா தான் வளர்த்துக் கொண்டச் சுமைகளினால் மிகவும் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்கிறோம். அதிலிருந்து விடுப்பட வேண்டும் எனத் தோன்றுகிறது. பாபா தியாகம், தபஸ்யா, சேவை

எனும் வழிகளைக் காட்டுகிறார். சந்நியாசிகள் வீடுகளைத் துறந்து காடுகளை நாடுகிறார்கள். பிரம்மாவின் குழந்தைகளான நாம் பழைய உடல் என்கிற வீட்டின் மீதானப் பற்றினை விட்டு எப்பொழுதும் குஷியுடன் இருக்கின்றோம். நம் உடலை பாபாவுக்கு அடமானம் வைத்து விட்டோம். நான் என்கிற உணர்விலிருந்து வெற்றி பெற்றோமெனில் நம் உரிமையை மீட்டுக் கொள்கின்றோம். தேகாபிமானத்தின் மீதானப் பிடிப்பு நம்மை விட்டு விலகுகிறது. இவ்வாறு பாபாவின் டிரஸ்டியாகி உடல் நிர்வாகத்திற்கான பொறுப்பை மட்டும் ஏற்றுக் கொள்கின்றோம்.

இரண்டாவது: உடல் மற்றும் அதை ஆட்கொண்டிருக்கும் கர்மேந்திரியங்களின் ஆளுமையிலிருந்து விடுபடல் அடுத்ததாகும். வெளியுலகக் கவர்ச்சிகளினால் வசீகரிக்கப்பட்டு, நாம் மனதால் கடவுளிடத்தில் தூய தொடர் பினைக் கொள்ள நம் இந்திரியங்கள் தடையாக வருகின்றன. நாம் நினைப்பது, காண்பது, கேட்பது, நாம் பேசும் வார்த்தைகள் ஆகியவைகளைத் தகுந்த ஆன்மீக உணர்வு களுடன் கட்டுப்படுத்தி சிரேஷ்ட சிந்தனைகளால், நம் ஆளுமைக்குள் கொண்டு வருவதால் உள் மன நிலையானது பாதிக்கப்படாமல் இருக்கும்.

மூன்றாவது: உடல் உறவினர்கள், தொடர்புகளினால் உண்டாகும் பிணைப்புகள் இவைகளிலிருந்தும் நாம் விடுபட வேண்டும். வெறுப்பு அல்லது விருப்பம் இரண்டும் தவிர்த்த நிலையினை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் விரும்பாதவர்களை வெறுக்கின்றோம். இதன் விதையாக கோபம் நம்மில் தோன்றுகிறது. இதுவும் ஒரு விதமான ராயல் தன்னலமாகும். நான் விரும்புவதில்லை ஏனென்றால் என் விருப்பத்தினை அவர்கள் பூர்த்தி செய்வதில்லை, என் பேச்சை கேட்பதில்லை எனும் அகங்காரம் வெளிப்படுகிறது. இதைப்போலவே நாம் யார் மீதும் விருப்பம் கொள்வதும், தவிர்க்க வேண்டும். ஒருவர் அல்லது ஒன்றின் மீது விருப்பம் கொண்டால் அதன் நிழல் எப்பொழுதும் நம் மீது படர்ந்து கொண்டிருக்கும். ஆதலால் நம் கவனமானது கடவுளிடத்தில் கொள்ள முடியாது. இதனை நாம் எவ்வாறு அறியலாம்? ஏதாவது பிரச்சினை தோன்றினால் நம் கவனமானது அவர் அல்லது அதன் மீதே செல்லும். ஆனால் சேவையின் பொருட்டு ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு செயல் படுவது வேறு விஷயமாகும். நம்மை பிடிப்பில் வைத்திருந்த இரும்பு சங்கிலிகளிலிருந்து விடுபட்டோம், ஆனால் நாமே அமைத்துக் கொண்ட தங்கச் சங்கிலியான நான் நல்ல யோகி, நல்ல பேச்சாளர், நல்ல ஆசிரியர் போன்ற நிலைகளானது பாபாவிடம் தொடர்புக் கொள்வதைத் தடுக்கிறது.

யோக மரியாதைகளைப் பற்றிக் கூறும் போது தாதி குல்சாா்ஜி அவர்கள் நான்கு விஷயங் களைக் குறிப்பாக கூறுகிறார்.

1) ஆன்மீகத்தை வாழ்க்கையில் தவறாமல் பயில்வது

2) ஞான சிந்தனையில் லயித்தல்

3) தந்தை பிரம்மாவுடன் உரையாடல்

4) பிறகு பிந்து நிலையில் நிலைத்திருக்க பயிற்சி

அடைய வேண்டிய குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, முயற்சியாகச் செய்ய வேண்டும் என்பதல்ல, அனுபவரீதியாக நாம் இயல்பாக ஏற்ற தகுதிகளை நம்மில் வர வழைத்துக் கொண்டு நன்கு உணர்ந்த முறையில் நாம் இவைகளை அனுபவம் செய்ய வேண்டும். பாபாவை நினைவு கொள்ளும் போது, எவ்வளவு அன்பு நிறைந்தவராக அவர் இருக்கிறார் என்று உணர்ந்த நிலையில், அவர் நம்மையும் அவ்வாறே விரும்ப நாம் தகுதி உடையவராக இருக்க முயல வேண்டும்.

யோகம் என்பது, நாம் பாபாவின் முன் அமர்ந்து, நம்மை முற்றிலும் வெளிப்படுத்தி, அவர் அன்பானது நம் ஆத்மாவை முழுவதும் ஏற்றுக் கொள்ள வேண்டும், நம்மை ஆட்

கொள்ள வேண்டும் என்ற உணர்விலிருப்பதாகும். அவ்வாறான அன்பு நம்மில் வெளிப்பட நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை விளக்குவதே ஞானமாகும். அவ்வாறு வெளிப்படாமல் இருக்க தடையாக இருக்கும் காரணங்கள் யாவை? என்னுடைய உணர்வுகளா? ஞானத்தில் ஆதாரத்தில் ஆராய்ந்து நாம் அறிய வேண்டும்.

பாபா முக்கியமாகக் கூறுகிறார், குழந்தைகளே, அசரீரியாகுங்கள், தந்தை போல் தேகமற்றவராக ஆகுங்கள் அசரீரி நிலையில் ஆன்மீக சொரூபமானது நம்மில் முழுமையாக வெளிப்படும். அவர் அருளித்தரும் ஞானத்துக்கும், மற்ற வழிகளுக்குமான வித்தியாசமும் இதுவே யாகும். இதுவே நம்முடைய பிராமண வாழ்க்கையின் இலட்சியமும், சிறப்புமாகும். இரண்டாயிரம் வருடங்கள் நாம், தேக அபிமானம் கொண்ட அனுபவங்களிலிருந்து முற்றிலும் விடுபட ஞானத்தைப் பயில்கிறோம். மனதால் பழையனவற்றை எல்லாம் ஒரு நொடியில் கடந்து, மறந்து விட முடிகிறது. பாபாவிடம் மனது ஒருங்கிணைந்து விடுகிறது.

பாபாவினுடைய தூய்மையானது, நம்முடைய உள் உலகத்தினையும், நம்முள் படிந்திருக்கும் சம்ஸ்காரங்களையும் கடந்து மாற்றமடையச் செய்யும். அவரின் ஆழ்ந்த அமைதியை ஆத்மாவும் உடன் எதிரொலிக்க வேண்டும். பாபா தன்னுடைய முழுமையான இணக்கத்தின் தூய்மையினையும் அன்பையும் கதிர்களாக வெளிப்படுத்துகிறார். நாமும் அதே அளவில் அவருடன் சேர்ந்து ஆன்மீக நிலையில் அவருடைய தூய அன்பு அதிர்வுகளை எதிரொலிக்கக் கூடியவராக ஆக வேண்டும். அப்போது தான் அளவற்ற சக்திகள் அவரிடமிருந்து அடைய தூய தொடர்பு நம்முடைய பழைய சம்ஸ்காரங்களை எரித்து விடுகின்றன. இவ்வாறான ஆழ்ந்த நிலையில் யோகத்தில் பாபாவைத் தொடர்பு கொள்ள தீவிர முயற்சித் தேவைப்படுகிறது.

ஆன்மீகத் தந்தையுடன் ஆன்மீக சொரூபத்தில் தான், தொடர்புக் கொள்ள முடியும். இதை நாம் முற்றிலும் உணர வேண்டும். ஆன்மீக உணர்வில் நாம் நிறைவு பெற்று அதன் சொரூபமாக மாறிவிடுவது மிகவும் முக்கியமானதாகும். ஒன்றை அடைவதின் ஆதாரத்தில் நம்முடைய முழு முயற்சியும் இருக்கிறது என்றால் இதுவே யாகும். இதுவே சங்கமயுக பிராமணர்களின் தனிச் சிறப்பாகும். அப்பொழுதே பாபாவின் உலகத்தை நாம் சார்ந்தவராகின்றோம். ஆத்மா, பரமாத்மாவை விட சூட்சுமமான வேறு எதுவுமில்லை. உருவம் அல்லது அளவு ஆகியவைகளுக்கு உள்ளடங்கியவர்களல்ல. யோக அனுபவங்களின் வாயிலாகவே ஆழ்ந்து உணர்ந்து அறியக்கூடியவராகும். ஆனால் அவரைப் பற்றி விவரிப்பது, அறிய வழி காட்டுவது ஆகியவை ஒரு நிலை விளக்கங்களேயாகும்.

என்னுடைய பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும், நிகழ்ச்சியும் இதை நினைவில் கொண்டு இடைவிடாது முயலும் போது பாபாவுடன் வளர்த்துக் கொள்ளும் தூய தொடர்பானது நீடித்து, குமுறும் எரிமலை போன்ற வேகத்தினை நம்மில் உண்டாக்கும். நம்முடைய பிராமண வாழ்க்கையின் சேவைகளினிடையே உண்டாகக் கூடியத் தொடர்புகளும் அப்பழுக்கற்று இருத்தல் மிக முக்கியமானதாகும். யார் மேலும் எந்த விதமான வெறுப்புகளின் சாயலும் நம்மில் இருத்தலாகாது.

அப்பாவினுடையத் தூய அன்பு எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய உணர்வுகள், அதிர்வுகள், நம் முகத்தின் சாயல், பழைய வாழ்க்கையின் நினைவுகள் எல்லாம் மிக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். நாம் செய்யும் இறைச் சேவையும் இதையே எதிரொலிக்க வேண்டும். எந்தவிதமான தங்கச் சங்கிலிகளிலும் நாம் மாட்டிக் கொள்ளக்கூடாது. அலௌகீக சேவையாளர்கள் எனும் நிலையிலிருந்து பரிஸ்தாவாக

நாம் மாற வேண்டும். தந்தை நமக்குத் தரும் சிரேஷ்டமான பாத்திரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஞானியான ஆத்மா தன் பங்கை உணர்ந்து ஏற்று, தன்னுடைய பரிஸ்தாவின் பாத்திரத்தையும் தயக்கமில்லாமல் நடத்தும், அந்த அளவு இந்த பங்கை நடத்த, நான் ஏற்ற நிலையை அடைந்திருக்க வேண்டும். இவ்வாறான பிராமண வாழ்க்கையின் அசலான ஆன்மீக உணர்வுகளே எதிர்கால சத்யுக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது. இதுவே நம்முடைய உயர்ந்த முயற்சியுமாகும்.

ஆன்மீக உணர்வின் அனுபவம் ஆழ்ந்த பலப்பல படிவங்களில் அறியக்கூடியதாகும். ஆன்மீக உணர்வானது, எண்ணங்கள், உணர்வுகள் முதலியவைகளினாலானதாகும். பாபாவின் அன்பின் ஆழத்தை அறிய எவ்வளவு நேரம் ஆகும்? ஆத்மா என்றும் அழிவற்று நிலைத்திருக்கும் தன்மையுடையது. தெய்வீக பண்புகள் குணங்களுக்கு உறைவிடமாகும். நம் குறிக்கோளானது நாம் யார்? யாருடைய குழந்தைகள் என்ற உண்மையை அறிவது. முற்றிலும் ஆன்மீக உணர்வில் லயித்திருக்கும்போது வேறு எதுவும் நம்மை ஈர்க்காது. ஆத்மா சுற்றிலும் உள்ள உலகிலிருக்கிறது. ஆனால் முற்றிலும் வேறுபட்டது. உருவத்திற்கு அப்பாற்பட்டது ஆனால் உலகில் செயல்படுகிறது. உலகத்தால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. ஆன்மீக உணர்வை ஆழ்ந்து உணர்வது மிக இன்றியமையாததாகும். எந்த அளவு நம் பயிற்சி இதில் நிலைத்திருக்கிறது? நம் ஒரே நோக்கம், உலகிலிருந்து விலகிய நிலையில் எப்பொழுதும் ஆன்மீக சொரூபத்திலிருக்க வேண்டும். பாபாவின் உலகில் நாம் இருக்க வேண்டும் என்பதாகும்.

## ஆசைகள்

கடவுள் கூறுகின்றார்: உங்களுடைய விருப்பங்கள் என்ன என்பதை என்னிடம் கூறுங்கள். உங்கள் விருப்பங்களை நான் பூர்த்தி செய்வேன்.

ஆனால் மக்கள் இதைச் செய்வதில்லை.

உதவியை நாடி மற்ற மனிதர்களைத் தேடிச் செல்கின்றனர். உதவி செய்வார்கள் என எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பும் ஒரு வகையான ஆசை தான்.

புகழ் வேண்டும், அங்கீகாரம் வேண்டும் என எதிர்பார்த்துக் கிடைத்தாலும் இது தற்காலிக மனத்திருப்தியைத் தரலாம். ஆனால் காலப்போக்கில் இது இழப்பை ஏற்படுத்தி விடும்.

உங்களுடைய செயல் மேலோட்டமானதாகவும், பெயரளவுக்கு மட்டுமே என்பதாகவும் ஆகிவிடும். இது மற்றவரிடமிருந்து உண்மையான ஆசிகளைப் பெறுவதிலிருந்து உங்களைத் தூரமாக்கி விடும்.

கடவுளுடைய உண்மையான விருப்பம், நாம் இப்போது அவரைப்போலவே ஆகிவிடவேண்டும் என்பதாக இருக்கிறது. ஆதலால் இப்போது நம்முடைய விருப்பமும் இது தான் என்பதாக ஆகி விடவேண்டும்.

# வெற்றிகரமான வாழ்க்கை

**தொகுப்பு: பி.கு. செண்பகராஜ், மதுரை**

வாழ்க்கை என்பதன் பொருள் என்ன? மனித வாழ்க்கையில் தான் எத்தனை விதமான நிகழ்வுகள், ஒவ்வொருவரிடமும் விதவிதமான பாகம், எண்ணங்கள், சிந்தனைகள், சிறப்பியல்பு கள் அமைந்துள்ளன. வாழ்க்கை என்பது வினோதமான விசயங்களாகவும், சிந்தனைக்கு அப்பால் கடந்தததாகவும் உள்ளது. வாழ்க்கை, நல்லவை, கெட்டவை என்ற பார்வைக்கு அப்பால் அனைத்து வகையிலும் ஒரு அர்த்தம் நிறைந்ததாக இருக்கிறது. வாழ்க்கையில் தேவையென்றோ, தேவையற்றது என்றோ எதையும் அறிதிட்டு கூறமுடியாது. ஒரு பார்வையில் ஒன்று தேவையானதாக இருக்கலாம், மறுபார்வையில் மற்றொன்று தேவையானதாக இருக்கலாம்.

வாழ்க்கைப் பயணம் நில்லாமல் ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு படகு. இதில் யாரரோ ஏறுவார்கள், யாரரோ இறங்குவார்கள். வாழ்க்கை என்ற ஓடமது ஆடும் அசையும், ஒரு பொழுதும் மூழ்காது. சில நேரங்களில் மூழ்கியது போன்று தெரியும் ஆனால் மூழ்கும் இடத்தில் ஒரு புதுப்பயணம் துவங்கும் என்பது தான் வாழ்க்கையின் நியதி.

வாழ்க்கை ஒரு விளையாட்டு, வெற்றி தோல்விகள் மாறி மாறி வரும் என்பார்கள். முயல்-ஆமை கதையெல்லாம் இப்பொழுது பழையதாகி விட்டது. மேலாண்மையில் இப்பொழுதெல்லாம் இருவருக்கும் வெற்றி வெற்றி என்ற சூத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. வாழ்க்கையில் வெற்றிக்கு பின் தோல்வி, தோல்விக்கு பின் வெற்றி என்று நினைத்துக் கொண்டு வாழ்வது வாழ்க்கை என்றால் அங்கு முயற்சியே இருக்காது.

வெற்றி எல்லாம் ஒரு வெகுமானமில்லை, தோல்வி எல்லாம் ஒரு அவமானமில்லை, தோல்வி கண்டு துவளாதீர்கள், பல நேரம் வெற்றிக்கான பாதை தரும், வெற்றியைக் கண்டு தூங்காதீர்கள், அது சில நேரம் மமதை தரும். சீட்டு விளையாட்டில், அமையும் சீட்டைப் பொறுத்து வெற்றி தோல்வி அமைவதில்லை. திறமைசாலிக்கு சரியான சீட்டாக இல்லா விட்டாலும் வெற்றியை அடைவார்கள், சிலருக்கு சீட்டு சரியாக அமைந்தும் கோட்டை விட்ட திறமையற்றவர்களும் உண்டு.

**மனதை வெற்றி-தோல்விக்கு சமநிலைப் படுத்து! மாலைகள் காத்திருக்கு உன்னை எதிர்பார்த்து!!**

வாழ்க்கை வாழத்தான், உங்கள் முன் வரும் காட்சிகளை கண்குளிரக் காணுங்கள், ரசியுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது புளித்துப்போன வாழ்க்கை கூட உங்களுக்கு இனிக்கும். எதிர்கால வாழ்க்கையின் நிகழ்வு களின் மீது உங்களுக்கு சந்தேகமான கேள்வி கள் எழுந்தால் அதற்குப் பதில் ஏமாற்றமே! கடந்த கால தாக்கத்தில் வாழ்ந்தால் கவலையே! பதிலைத் தேடி அலையாதீர்கள். அது வாழ வாழத்தான் புரியும். நிகழ்காலத்தில் வாழுங்கள். வாழ்க்கை யைத் துறப்பதால் பதில் கிடைக்காது. உடனயே கிடைத்துவிடும் பதிலெல்லாம் மூன்று காலத்திற்கும் பொருந்தாது. கேள்விகள் வர வேண்டிய அவசியமில்லாத இடத்தில் எழும் கேள்விகளுக்கு காலம் தான் பதில் அளிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பதிலைத் தேடி அலைவதே வாழ்க்கையானால், வாழ்க்கையே கேள்விக் குறியாகி விடும். மக்கள் எதைத்தேடி அலை கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, அதைப் பயன்படுத்தி சம்பாதித்தவர்கள் தான் ஏராளம்.

காற்றைத் தேடி அலையாதீர்கள் காற்று வெற்றிடத்தை நோக்கித் தான் அலைகின்றது.

உனக்குள் ஒரு வேட்கையிருந்தால் அது உன்னைத் தேடி வரும்! லட்சணங்களை உருவாக்கினால் லட்சியம் தானாக நிறை வடையும்.

வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசி யமான உணவு, உடை, உறைவிடம் போன்ற புறப்பொருட்களை அடைய நினைக்கும் மனிதன் அகப்பொருளை மறந்து விடுகின்றான். அதாவது மனதின் எண்ணங்கள், காலந்த வறாமை, பண்புகள், மன ஆரோக்கியம், மனோ சக்திகள் இவற்றின் அடிப்படையில் தான் வாழ்க்கை உன்னத நிலையை அடைகின்றது. இவற்றில் ஒன்றில்லை என்றாலும் வாழ்க்கையில் வசந்தமிருக்காது. அதாவது கல்லுக்குள் இருக்கும் தேறைக்கும் படி அளப்பார் இறைவன் என்று கூறிக் கொண்டே வாழ முடியாது. செயல்முறை முயற்சியின்றி இறைவனைப் பலிகடா ஆக்க முடியுமா என்ன?

***எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைத் தருகிறது, ஏற்பாடு ஏற்றத்தைத் தருகின்றது.***

வாழ்க்கை என்பது உன் கையில் உள்ளது. நமது நிலைக்கும் எண்ணத்திற்கும் அனேக ஒற்றுமையுண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணங் களே உங்கள் கையில் அதிஷ்டரேகை யாகவும், ஆயுள் ரேகையாகவும் மாறுகின்றது. பரிகாரத்தில் எந்த பலனுமில்லை, மாறாக பரிகாரத்தை செய்யத் தூண்டிய எண்ணமே பலனைத் தருகின்றது. ஒரு சுவாமிஜியின் வாக்குப்படி, தனது வீட்டின் முகப்பில் பொன் மொழி ஒன்றை எழுதி ஒட்டியதால் தனது வாழ்க்கையில் பல விதமான பீடைகள் அகன்று விட்டது என்று கூறிக் கொண்டிருந்தார் ஒருவர். உண்மையில் பொன் மொழியினாலோ அல்லது அந்த சுவாமிஜியின் வாக்கினாலோ இந்த பலன் கிட்டவில்லை. பொன் மொழியினால் அவரின் வீட்டின் மீது தெருவில் சென்றவர்களின் நல்ல எண்ணங்களின் தாக்கம் தான் அத்தனை காரியத்தையும் செய்ய வைத்துள்ளது. எனவே தான் எண்ணம் போல் வாழ்வு என்றும் மனம்போல் மார்க்கம் என்று கூறுகின்றனர். எண்ணங்கள் நம்மை சுற்றிலும் கண்ணிற்குத் தெரியாத ஒருவித காந்த அலைகளைப் பரப்புகின்றன. அதன் அடிப்படை யில் நமக்கு பலாபலன் அமைகின்றது. எனக்கு ஏன் இப்படி வாழ்க்கை அமைந்தது என்று இறைவனைக் கேட்காதீர்கள். உங்கள் எண்ணத்தை கேளுங்கள். எண்ணங்களை மாற்றுங்கள், அனைத்தும் தானாகவே மாறும்.

இப்பொழுதெல்லாம், நாம் நம் வாழ்வில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று இருக்க முடியாது. நாம் எப்படி வாழ்கின்றோமோ அப்படித்தான் மற்றவர்கள் நம் மீது நல்ல எண்ணங்களை மற்றும் நல்ல பாவனையை (ஆசீர்வாதங்களை) வைப்பார்கள். இதற்காக இன்று இறைவழிபாட்டு இடங்களுக்கு சென்றாலும் பெரிய மகான்களையும் சாது சன்னியாசிகளையும் மற்றும் பெரியவர்களைச் சந்தித்து ஆலோசனை களை, ஆசீர்வாதங்களைப் பெற செல்கின்றார்கள். அதுமட்டுமின்றி, ஒவ்வொரு வினாடியும் நம் வாழ்க்கைப்பாதையில் வரும் ஒவ்வொரு நபருமே மகான்கள் போல் முன் வருகின்றார் கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. அதாவது, நம் முன் வரும் ஒவ்வொருவரின் எண்ணங்கள் எப்படிப்பட்ட விளைவையும் ஏற்படுத்தவல்லது. அவர்களிடமிருந்து நல்லவையையோ, அல்லது தீயவைகளையோ அடைவது அவரவர் நடத்தையைப் பொருத்து அமைகின்றது. உதாரணமாக, ஒருவர் மிகவும் சோகமாக இருந்தார், ஏன் என்று வினவிய பொழுது அவர் நான் பெரிய விபத்து நடப்பதற்குக் காரணமாகி விட்டேன் என்றும் எனக்கு எனது எண்ணங்களை நினைத்து தேவனையாக உள்ளது என்றும் கூறினார். தெளிவாகக் கேட்டபொழுது கூறினார்: இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபொழுது ஏற்கனவே விபத்து நடந்து இடத்தில் கண்ணாடித் தூள்கள் சிதறிக்கிடந்தன. அருகில் ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. நான் அந்த

லாரி தான் காரணமோ என்று எண்ணிக் கொண்டே அந்த லாரியின் முன் முகப்பை எட்டிப் பார்த்தேன். எந்த சேதமும் இல்லை. அதன் ஓட்டுனரும் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருப் பதைப் பார்தேன். நான் பிறகு எந்த எண்ணத் தையும் ஏற்படுத்தாது அந்த விசயத்தை அங்கேயே விட்டுவிட்டு அதே பாதையில் அடுத்த வேலைக்குச் சென்று விட்டேன். சிறிது நேரம் கழித்து அதே வழியில் ஒரு கோர விபத்தில் அந்த லாரியும் டிரைவரும் சிக்கிக் கொண்டதைப் பார்த்து, எனது எண்ணம் தான் இதற்கு காரணமோ என்ற தோன்றுகின்றது. என்று கூறினார். காரணம் யாரென்று எண்ணத் தேவையில்லை. ஆனாலும் பலர் காரணமாக இருந்திருக்கின்றார்கள் என்பதே உண்மை. இவரைப் போன்று அந்த வழியில் எத்தனைபேர் சென்றார்களோ அத்தனை பேரும் இவரைப் போன்று தான் எண்ணியிருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இதிலிருந்து நாம் எதைச் செய்கின்றோம் என்பதைக் காட்டிலும் எப்படிச் செய்கின்றோம் என்பதே முக்கியம். எனது செயலால் மற்றவர்கள் எதை நினைக்கின்றார்கள் என்பது மிகமுக்கியமான தாகும். இதைத்தான் ஆசீவாதத்தை பெறுவது மற்றும் கொடுப்பதாகும். நாம் முன்னேற நாமும், நமது நடத்தை மட்டும் காரணமில்லை. நம்மைப்பற்றி மற்றவர்கள் எப்படி எண்ணு கின்றார்கள் என்பதைப்பொருத்து தான் அமை கின்றது என்பது புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும்.

வாழ்க்கையில் திருப்தியை அடைய மன்னிக்க, மறக்கத் தெரிய வேண்டும். மற்றவர்களை மதித்து மரியாதை கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். வம்புக்குப் போகாமல் வாழ்த்தி வாழ வேண்டும். மகிழ்ச்சியாக வாழ வேண்டும். பிறர் மகிழவும் வாழத் தெரிய வேண்டும். கனித்து, கனிந்து வாழ வேண்டும், பலருக்கு பலன் அளிக்கும் கனியாக வாழ வேண்டும்.

வாழ்க்கை கடலில் செல்லும் படகு போன்றது, அதற்கு எல்லையே இல்லை, அதில் வரும் அலைகளில் மூழ்கி விளையாடினால் முத்தைக் கொடுக்கும், வாழ்க்கைப் போராட்டத்தில் நீந்தி செல்ல வேண்டும் அல்லது தன்னம்பிக்கை யினால் மிதக்கத் தெரிந்தாலே போதும். இறைவனது உதவி தானாக உங்களை கரை சேர்த்து விடும். அப்படி என்றால் வெற்றிகரமான வாழ்க்கை என்பது என்னவென்று நீங்களே பார்த்துக்கொள்ளுங்களேன்!

## புத்திசாலி தானே நீங்கள்!

**சொர்க்கத்திற்கு செல்ல காத்திருப்பது என்பது 1ம் நம்பர் பேருந்திற்காக காத்திருப்பது போன்றது. அது இன்னும் சற்று நேரத்தில் வந்தடைய உள்ளது. இறைவனே அதன் ஓட்டுனர்! எனவே இறைவனுக்கு பின்னால் நடந்து செல்வீர்கள் எனில் சொர்க்கத்திற்கு செல்லும் வரிசையில் நிற்பவர்களில் நீங்களும் ஒருவர்.**

**புத்திசாலி மனிதன் இறைவனுடைய அடிக்கு பின்னால் நடப்பவர்கள். அதாவது தனது எண்ணங்களினாலும், செயல்களினாலும், அவரை பின்பற்றுபவர்கள். எப்போது நீங்கள் அவருக்கு சமமாக செல்கிறீர்களோ அப்போது உங்களுக்கு சொர்க்கத்திற்கு நிச்சயம் அனுமதி உண்டு, ஆகவே புத்திசாலி தானே நீங்கள்.**

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அன்னபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87